பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | புரட்டாதி 23 | செவ்வாய்க்கிழமை 09.10.2018 | கதிர் 337

**இனி இது ரகசியம் அல்ல!**

கடந்த சுமார் நாற்பது வருடங்களாக நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றீடு செய்வதற்கான பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தின் வரைவு இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

இலங்கைத் பக்கம் 03

# அரசியல் கைதிகள் விடுதலைக்கு அ'புரம் சிறை நோக்கி நடைபவனி

## யாழ்.பல்கலை மாணவர்கள் இன்று ஆரம்பிக்கின்றனர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 09

சிறைச்சாலைகளில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்யுமாறும், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்வதற்கான அரசியல் தீர்மானம் ஒன்றை எடுக்க அரசை வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரம் சிறைச்சாலை வரை நடைபவனி ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நடைபவனி இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் என யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் அறிவித்துள்ளது. பக்கம் 14

## 'அரசியல் கைதிகளை விடுதலை செய்' யாழ்.பல்கலை மாணவர் போராட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 09

அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டுமெனவும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டு பக்கம் 14

## விஜயகலா கைது; சிவாஜி கண்டனம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 09

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப் பக்கம் 14

## கைதானார் விஜயகலா எம்.பி.! பின்னர் பிணையில் விடுதலை



கொழும்பு, ஒக். 09

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயகலா மகேஸ்வரன், நேற்றுக் காலை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட நிலையில் இரண்டு மணித்தியாலயங்களின் பக்கம் 03

## அச்சுவேலியிலும் போராட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 09

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு பக்கம் 14

## அமெ. உயர் அதிகாரி இன்று இலங்கைக்கு



கொழும்பு, ஒக். 09

அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பக்கம் 14

## வடக்கு - கிழக்குக்கு அதிக நிதி கோரி மங்களவை சந்திக்கும் கூட்டமைப்பு

### மாவை எம்.பி. நேற்றுத் தகவல்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 09

போரால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களில் மீள்கட்டுமானங்களுக்கு அரசால் வழங்கப்படும் நிதி போதுமானதாக இல்லை. ஆகவே அதிகளவான நிதியை ஒதுக்குமாறு அரசைக் கேட்கின்றோம். இது தொடர்பில் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவை விரைவில் சந்திக்க உள்ளோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை பக்கம் 14

## நாலக சில்வா, நாமல் குமார வெளிநாடு பயணிக்கத் தடை

கொழும்பு, ஒக். 09

படுகொலை செய்ய சதித்திட்டம் தீட்டியமை தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பிலான விசாரணைக்காக நேற்றுத் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் பக்கம் 14

## வாள் முனையில் அச்சுறுத்தி பணம், நகைகள் கொள்ளை!

### மீசாலை ஆசிரியர் ஒருவரின் வீட்டில் சம்பவம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 09

மீசாலைப் பகுதிலுள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டுக்குள் பக்கம் 14

## பீரிஸின் வீட்டில் இன்று கூடுகிறது மஹிந்த அணி!

கொழும்பு, ஒக். 09

கூட்டு எதிரணி எம்.பிக்களுக்கும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையிலான முக்கியத்துவமிக்க சந்திப்பொன்று இன்று பக்கம் 14

## சாலைப் பகுதியில் வாடிகளை அமைக்கும் தெற்கு மீனவர்கள்

### வடமராட்சி கிழக்கு பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டமையை அடுத்து

முல்லைத்தீவு, ஒக். 09

வடமராட்சி கிழக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட தென்னிலங்கை மீனவர்கள் முல்லைத்தீவு சாலைப்பகுதியில் வாடி அமைத்து கடல் அட்டை பிடித்து வருகின்றனர் என அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். பக்கம் 14

## 12 வேங்கைகளுக்குத் தீருவிலில் நினைவுத்தூபி அமைக்க அனுமதி

### தடை கோரிய பொலிஸாரின் மனு நிராகரிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 09

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் உயிர்நாடியாக செயற்பட்டு வீரச்சாவைத் தழுவிய குமரப்பா, புலேந்திரன் உள்பட 12 வேங்கைகள் நினைவாக வல்வெட்டித்துறையில் தூபி அமைப்பதற்கு நகர சபை முன்னெடுத்த பணிக்கு தடையுத்தரவு கோரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட பக்கம் 03

## ஓய்வூதிய வயதெல்லை விரைவில் மாற்றப்படும்

### கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 09

ஓய்வூதியர்களுக்கான வயதெல்லை விரைவில் மாற்றியமைக்கப்பட உள்ளது எனத் தெரிவித்தார் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பக்கம் 14

# அரசமைப்பு சபை செயலிழந்ததால் நீதியரசரை நியமிப்பதில் சிக்கல்!

அரசமைப்பு சபைக்கான ஆறு உறுப்பினர்கள் இன்னமும் நியமிக்கப்படாமல்இருக்கின்றமையால், புதிய தலைமை நீதியரசரை நியமிக்கும் நடவடிக்கைகளில் சிக்கல் எழுந்துள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் தற்போதைய தலைமை நீதியரசர் பிரியசாத் டெப் எதிர்வரும் 12 ஆம் திகதி ஓய்வுபெறவுள்ளார்.

இதையடுத்து, புதியதலைமை நீதியரசரை, ஜனாதிபதி முன்மொழிய வேண்டும். அதனை அரசமைப்பு சபை அங்கீகரிக்க வேண்டும்.

19ஆவது அரசமைப்புத்திருத்தத்துக்கு அமைய, ஆணைக் குழுக்கள் மற்றும் உயர் பதவிகளுக்கான நியமனங்கள் சபாநாயகர் தலைமையிலான 10 பேர் கொண்ட அரசமைப்புச் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

எனினும், 10 பேர் கொண்ட அரசமைப்புச் சபையின் 6 உறுப்பினர்களின் 3 ஆண்டு பதவிக்காலம், கடந்த செப்ரெம்பர் மாதத்துடன் முடிவுக்கு வந்தது. புதிதாக 6 உறுப்பினர்கள் அரசமைப்புச் சபைக்கு நியமிக்கப்படுவதில் இழுபறியான நிலை காணப்படுகிறது.

அரசமைப்புச் சபைக்கான உறுப்பினர்கள் நாளை 10 ஆம் திகதிநியமிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்ப்பதாக, சபாநாயகர் கரு ஜெயசூரிய நேற்று முன்தினம் தெரிவித்தார்.

பிரித்தானியாவில் தற்போது தங்கியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடுதிரும்பியதும் உடனடியாக இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அரசமைப்பு சபைக்கான உறுப்பினர்களின் பெயர்கள் இறுதி செய்யப்பட்டு தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டதும், அந்தப் பட்டியல் இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

எனினும், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் அரசியல் கட்சிகளுடன் இணைந்து பிரேரிக்க வேண்டிய ஐந்து உறுப்பினர்களின் பட்டியல் இன்னமும் இறுதி செய்யப்படவில்லை.

அதேவேளை, ஜனாதிபதி தனது பிரதிநிதியாக அமைச்சர் மஹிந்த சமரசிங்கவை ஏற்கனவே அறிவித்துள்ளார்.

இதற்கிடையே அரசமைப்பு சபையின் உறுப்பினர் பதவிக்கு சிவில் சமூகப் பிரதிநிதிகளில் இருந்து, கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் மூத்த விரிவுரையாளரான என்.செல்வக்குமரன், கல்வியாளரும், இராஜதந்திரியுமான ஜாவிட் யூசுப், முன்னாள் இராஜதந்திரி ஜெயந்த தனபால ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட வாய்ப்புகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், ஜெயந்த தனபாலவை நியமிப்பதற்கு சில தரப்பினர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

முன்னதாக, கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவின் பெயர் முன்மொழியப்பட்டது. அதற்கு கூட்டு எதிரணியினர் கடும் எதிர்ப்பைவெளியிட்டனர்என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசமைப்பு சபைக்கான புதிய உறுப்பினர்களை நியமிக்கும் விடயத்தில் இழுபறிகள் நீடித்து வரும் நிலையில், புதிய தலைமை நீதியரசர் நியமனத்தில் சிக்கல்கள் எழுந்துள்ளன.

எதிர்வரும், 12 ஆம் திகதி தற்போதைய தலைமை நீதியரசர் ஓய்வுபெற்ற பின்னர், புதிய தலைமை நீதியரசரை, அரசமைப்பு சபையின் அனுமதியுடன் ஜனாதிபதி நியமிக்க வேண்டும்.

அரசமைப்பு சபை செயற்பட முடியாத நிலையில் இருப்பதால், தற்காலிகமாக, பதில் தலைமை நீதியரசர் ஒருவரை நியமிக்க வேண்டிய நிலை ஜனாதிபதிக்கு ஏற்படலாம்.


14 நாள்களுக்கு பதில் தலைமை நீதியரசரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது.

அரசமைப்பு சபையின் உறுப்பினர்கள் நியமனத்தில் தாமதம் ஏற்பட்டால், மூத்த உச்சநீதிமன்ற நீதியரசர் ஈவா வனசுந்தர பதில் தலைமை நீதியரசராக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடுதிரும்பியதும் அரசமைப்பு சபைக்கான உறுப்பினர்களை நியமிப்பது குறித்து தாம் பேச்சு நடத்தவுள்ளோம் என எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நோர்வேக்கு புறப்பட முன்னரும் இதுபற்றி பேசியிருந்தோம் என்றும் அவர் நாடு திரும்பியதும், அவரைச் சந்தித்து பேசி முடிவெடுக்கவுள்ளோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# இலங்கைக்கு அதிகபட்ச உதவி; ரணிலிடம் நோர்வே பிரதமர் உறுதி




இலங்கையின் மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்வதற்கான நவீன தொழில்நுட்ப உதவிகளை வழங்க நோர்வே முன்வந்துள்ளது.

நோர்வேக்குப் பயணம் மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடந்த சனிக்கிழமை இரவு, ஒஸ்லோவில் நோர்வே பிரதமர் எமா சோர்பேர்க்கை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதையடுத்து, இரு நாடுகளின் பிரதமர்களும் கூட்டாக ஊடகச் சந்திப்பு ஒன்றை நடத்தினர்.

இதன்போதே, இலங்கையின் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்கான நவீன தொழில்நுட்ப உதவிகளை வழங்க நோர்வே முன்வந்துள்ளது என பிரதமர் ரணில் தெரிவித்தார்.

இலங்கைக்கு நோர்வே கடந்த காலங்களில் அளித்த உதவிகளுக்காக நன்றி தெரிவித்த பிரதமர் ரணில், அம்பாந்தோட்டையின் கிராமப் புற அபிவிருத்திக்காக நோர்வேயிடம் உதவி பெறப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

இந்தியப் பெருங்கடலில் அமைதியை நிலைநாட்டுவதற்கும், இலங்கையின் மீன்பிடித்துறையை அபிவிருத்திசெய்வதற்கும், நோர்வேயிடம் இலங்கை உதவி கோரியுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது இந்தியப் பெருங்கடலில் நிலையான அபிவிருத்தி தொடர்பாக இரு தலைவர்களும் பேச்சு நடத்தினர்.

இந்தியப் பெருங்கடலை நிலையான அபிவிருத்தி வலயமாக மாற்றுவது குறித்தும் பேச்சு நடத்தப்பட்டது.

மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை பாதுகாப்பது குறித்து, ஏற்கனவே இணங்கப்பட்ட விடயங்களை தொடர்ந்து செயற்படுத்தவும் இரண்டு நாடுகளும் இணங்கியுள்ளன.

அத்துடன், இலங்கைக்கு அதிக பட்ச உதவிகளை வழங்குவதாகவும், நோர்வே பிரதமர் சொல்போர்க் உறுதியளித்துள்ளார்.

# வடமாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டி!





யாழ்ப்பாணம்,ஒக்.9

யாழ்ப்பாணத்தில் வடமாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டி ஒன்று நடைபெற்றுள்ளது.

இவ் விளையாட்டு போட்டியாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

இதில் வடமாகாண கல்விபண்பாட்டுஅமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வெற்றியீட்டிய ஆசிரியர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் யாழ்.முன்பள்ளி ஆசிரியர்கள், தொழிற்சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது.

# மைத்திரி – மஹிந்தவுக்கு இடையில் எவ்வித சந்திப்பும் இடம்பெறவில்லை!

**ஊடகவியலாளர் சந்திப்பில் ஜி.எல். பீரிஸ்**



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எவ்விதமான சந்திப்புக்களும் இடம்பெறவில்லையென பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி. எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசில் இருந்து ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சி வெளியேறுவதற்கான தருணம்வந்துள்ளதென மஹிந்த ராஜபக்ஷகுறிப்பிட்டமை நடைமுறையில் சாத்தியப்படுமாக இருந்தால் வெகுவிரைவில் தேசிய அரசியலில் மாற்றங்கள் ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

நெலும் மாவத்தையிலுள்ள பொதுஜன பெரமுனவின் கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# ஹன்சிகாவின் வீட்டுக்கு சென்று வாழ்த்தினார் வட மாகாணசபை உறுப்பினர்!



புலமைப்பரிசில் பரீட்சையில் 197 புள்ளிகளை பெற்று தேசிய ரீதியில் மூன்றாமிடத்தையும், மாவட்ட ரீதியாகமுதலிடத்தையும்பெற்ற மாணவியான ஹர்த்திக் ஹன்சிகாவின் வீட்டிற்கு மாகாணசபை உறுப்பினர் சத்தியலிங்கம் சென்றுள்ளார்.

சிவபுரம் அ.த.க பாடசாலை மாணவியான ஹன்சிகாவின் வீட்டிற்கு அவர் நேற்று முன்தினம் சென்றிருந்தார்.

இதன்போது அவர் மாணவியைபாராட்டி கௌரவித்ததுடன், தொடர்ந்தும் கல்வியில் ஊக்கத்துடன் ஈடுபட்டு சமூகத்தில் உச்ச நிலைக்கு வளர வேண்டுமென வாழ்த்தியுள்ளார்.

# பாதிப்புக்களை எதிர்கொள்ள படையினர் தயார்: இராணுவம்!

கொழும்பு, ஒக்.09

சீர்றவானிலையால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்வதற்கு 1,200 படையினர்தயாராக உள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேற்று முன்தினம் 200 இராணுவத்தினர்அனுப்பி வைக்கப்பட்டனர் என இராணுவ ஊடகப் பேச்சாளர், பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் 60 பேரும் காலி மாவட்டத்தில் 50 பேரும் களுத்துறை மாவட்டத்தில் 110 இராணுவத்தினரும் சேவையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.க. பின்வரிசை எம்.பிக்கள் கொழும்பில் இரகசியச் சந்திப்பு!

கொழும்பு, ஒக். 09
ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை எம்.பிக்கள் சிலர் கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டலொன்றில் இரகசியச் சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர் என நம்பகரமான அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டில் இல்லாத நிலையில் – மேற்படி இரகசியச் சந்திப்பு இடம்பெற்றுள்ளமையானது சிறிகொத்தா வட்டாரத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு, கிழக்கு, மத்திய உட்பட ஆறு மாகாணசபைகளுக்கு விரைவில் தேர்தல் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில் அது தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்தச் சந்திப்பு நடத்தப்பட்டது என ஐ.தே.கவின் பின்வரிசை எம்.பியொருவர் தெரிவித்தார்.

அத்துடன், மாகாணசபைத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் முதல்வர் வேட்பாளர்களாக களமிறக்கப்படவேண்டியவர்களின் பெயர்ப் பட்டியலொன்றும் இக் கூட்டத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. பிரதமர் நாடு திரும்பியதும் இந்தப் பட்டியல் அவரிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 12 வேங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வழக்கை நீதிவான் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

தமிழிழ விடுதலைப் புலிகளின் தளபதிகளான லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட 12 வேங்கைகள் நினைவாக வல்வெட்டித்துறை, தீருவிலில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி இராணுவத்தினரால் இடித்து அழிக்கப்பட்டது. அந்தத் தூபியை மீள அமைப்பதற்கு வல்வெட்டித்துறை நகர சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய கடந்த 5ஆம் திகதி அடிக்கல் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, அதனைத் தடுத்து நிறுத்தக் கோரி வல்வெட்டித்துறைப் பொலிஸார், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் மனுவொன்றைத் தொடர்ந்திருந்தனர்.

அத்துடன், நகர சபைத் தலைவரை அன்றையதினம் மன்றில் முன்னிலையாகுமாறு நீதிமன்று அறிவித்திருந்தது. வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவரும் மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

இதன்போது சட்டத்திற்கு முரணாகப் பொது அமைதிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலே இந்தத் தூபி அமைக்கப்படுவதால் இதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமெனப் பொலிஸார் கோரியிருந்தனர்.

அது சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமையவே நடைபெறுவதாகச் சட்டத்தரணி சிறிகாந்தா மன்றில் தெரிவித்திருந்தார். இதனையடுத்து நேற்று இதற்கான கட்டளையிடுவதற்காக நீதிவான் வழக்கை ஒத்திவைத்தார்.

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு நேற்று விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டது.

வல்வெட்டித்துறை நகர சபையானது இலங்கையின் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாகும். நகர சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்ட சட்ட ரீதியான தீர்மானம் ஒன்றுக்கு அமையவே தீருவில் பகுதியில் தூபியைக் கட்டுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தச் செயற்பாடானது இலங்கையின் எந்தவித சட்டவிரோதமான பணத்திலும் மேற்கொள்ளப்படவில்லை. நகர சபைத்தலைவர் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தச் சட்ட ரீதியாகவே ஈடுபட்டுள்ளார்.

இந்தத் தீர்மானத்துக்கு எதிராக நீதிவான் நீதிமன்றினால் கட்டளையோ அல்லது தடைக் கட்டளையோ ஆக்க முடியாது. அதன் காரணத்தால் அந்தச் செயற்பாடு சட்டரீதியற்றது அல்ல என்ற அடிப்படையில் இதனை எதிர்த்துத் தடை விதிக்கக் கோரி பொலிஸாரினால் தொடுக்கப்பட்ட விண்ணப்பம் மன்றினால் நிராகரிக்கப்படுகிறது என்று நீதிவான் கட்டளை வழங்கினார். (ஐ)

## கைதானார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பின்னர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவரை 5 லட்சம் ரூபா ஆள் பிணையில் விடுவித்து கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கைதானஉடனேயேகொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட விஜயகலா மகேஸ்வரனை, 5 இலட்சம் ரூபா பிணையில் செல்ல நீதிவான் ரங்க திசநாயக்க அனுமதி அளித்தார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயகலா மகேஸ்வரன், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அரச நிகழ்வில் உரையாற்றியபோது, தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.

அவரது இந்த உரை அரசமைப்பை மீறும் செயல் எனக் குறிப்பிட்டசட்டமா அதிபர், வழக்குத் தாக்கல் செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 120ஆம் பிரிவின் கீழ் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் திட்டமிட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அந்த வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினரைக் கைது செய்வதற்கான பிடியாணையும் அவர்கள் மன்றில் பெற்றிருந்தனர்.

அதனடிப்படையில் வாக்குமூலம் வழங்குவதற்காக பொலிஸ் திட்டமிட்ட பிரிவுக்கு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்குப் பொலிஸார் அழைப்பாணை வழங்கினர்.

தனது சட்டத்தரணிகளுடன் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அவர் நேற்றுக் காலை சென்றிருந்தபோது, அவர் கைது செய்யப்பட்டார்.

விஜயகலா சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவின் அனுசரணையில் ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா, சட்டத்தரணி கே.வி.தவராசா ஆகியோர் முன்னிலையானார்கள்.

### பின்னணி

யாழ்ப்பாணத்தில் கடந்த ஜூலை 2ஆம் திகதி நடந்த அரச நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் விஜயகலா, தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

அது தென்னிலங்கையில் மாத்திரமின்றி நாடாளுமன்றிலும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனை அந்தப் பதவியிலிருந்து நீக்குமாறு நாடாளுமன்றில் கோரப்பட்டதையடுத்து ஐக்கிய தேசியக் கட்சி கடும் அழுத்தங்களை விஜயகலா மகேஸ்வரனுக்கு வழங்கியது.

இதனால் அவர் தனது இராஜாங்க அமைச்சுப் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி, பிரதமரிடம் வழங்கினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனின் பதவி விலகலை கடந்த 9ஆம் திகதி ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி வர்த்தமானி அறிவிப்பையும் வெளியிட்டார்.

இந்த நிலையில் அவரது கருத்துக்கு எதிராக கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்திய ஒரு குரூரச் சட்டத்தின் முடிவுக்கு அடிகோலப்பட்டிருக்கின்றது.

படையினரதும், பொலிஸாரினதும் தடுப்புக் காவலில் இருக்கும் சமயத்தில் சந்தேகநபர் ஒருவரிடமிருந்து பெறப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அந்தச் சந்தேகநபருக்கு எதிரான சான்றாதாரமாகப் பயன்படுத்தி அவரைக் குற்றவாளியாக்கும் மிகக் கொடூரமான சட்டம் இது.

படையினரின் அல்லது பொலிஸாரின் காவலில், அவர்களினால் சித்திரவதை செய்யப்பட்டு, வலிந்து இந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒப்பம் பெறப்பட்டுள்ளது என்ற உண்மையை சந்தேகநபர் நீதிமன்றில் தெரிவித்தால் அதனை நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டிய – எண்பிக்க வேண்டிய – பொறுப்பு (Burden of Proof) அந்தச் சந்தேகநபரைச் சாரும் என்கிறது மோசமான இச்சட்டம்.

அதாவது பொலிஸ் காவலில் சித்திரவதை செய்யப்பட்டு, பொய் வாக்குமூலம் பதியப்பட்டு, அதில் பலவந்தமாக ஒப்பம் பெறப்பட்டது என்பதை தடுப்புக் காவல் கைதியே நீதிமன்றத்தில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்காவிட்டால் அந்த வாக்குமூலத்தை சட்டரீதியான ஒரு சான்றாதாரமாகக் கொண்டு அதனடிப்படையில் அந்தக் கைதியைத் தண்டிக்க முடியும்.

பொலிஸ் காவலில் சித்திரவதை செய்யப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது என்பதற்கு சாட்சியம் சொல்ல யார் வருவர்? கடமையில் இருக்கும் பொலிஸார் அப்படி உண்மையைச் சொல்ல முன்வருவார்களா?

அத்தகைய முட்டாள்தனமான – காட்டுமிராண்டித்தனமான – இயற்கை நீதி, நியாயங்களுக்கு முரணான – இந்தச் சட்டத்தின் கீழ் சந்தேகநபர்கள் காலவரையறையின்றித் தடுத்து வைக்கப்பட்டனர். நீதிமன்றத் தலையீடோ, கண்காணிப்போ இன்றி நீண்டகாலம் படைக் காவலின் கீழ் கொடூரச் சித்திரவதைகளுக்கும், சொல்லெணா இன்னல்களுக்கும் தமிழ்க் கைதிகள் உள்ளாக்கப்பட்டனர்.

ஈழத்தமிழரின் வரலாற்றில் அவர்களின் ஆன்மாவில் மோசமான காயத்தை ஏற்படுத்திய இச்சட்டத்தில் இருக்கும் மோசமான குறைபாடுகள் – குறிப்பாக குற்ற ஒப்புதல் வாக்குமூல விவகாரம் போன்றவை – புதிய சட்ட வரைவில் தொடர்ந்தும் உள்ளனவா என்று பார்க்க வேண்டும்.

தற்போதைய அரசமைப்புக்கும் முந்தியது தற்போதைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்.

அதை 1978இல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தவரும் ஒரு தமிழர்தான்.

1977 பொதுத் தேர்தலின் போது தமிழர் பிரதேசத்தில் பெரும்பாலான இடங்களில் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றிபெற, கிழக்கில் கல்குடாத் தொகுதியில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிட்ட தேவநாயகம் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். பின்னர் நீதி அமைச்சரான அவரே இந்தச் சட்டத்தை அப்போதைய ஜே.ஆர்.அரசு சார்பில் சபையில் சமர்ப்பித்தார்.

தமிழரே தமிழருக்கு விதைத்த வினை இது. நாற்பது ஆண்டுகள் கழிந்தும் அதன் விளைவை நாம் அறுத்துக் கொண்டிருக்கிறோம்.

- மின்னல் -


# ஊடகத்துறைச் சான்றிதழ் பயிற்சிநெறி

**இலங்கை ஊடகவியல் கல்லூரியின் சான்றிதழ்**

- வெகுசன ஊடகத்துறையில் பிரகாசிக்க
- வானொலி, தொலைக்காட்சியில் தொகுப்பாளராக அறிவிப்பாளராக வலம் வர
- ஊடகவியலாளராக வலம் வர
- குறும்பட இயக்குனராவதற்கு
- நவீன ஊடகத்துறையில் மிளிர்வதற்கு




**வீடியோ, ஓடியோ எடிட்டிங், டிசைன் & லேஅவுட், வீடியோ, டிஜிட்டல் கமராக்களை நீங்களே கையாளலாம்.**



- ஆங்கிலம், சிங்களம் கற்கலாம்
- 100% தொழில்சார் களப்பணிப் பயிற்சிகள்

விரிவுரைகள், பயிற்சிகள்:
வார, வார இறுதி நாட்களில்

விண்ணப்ப முடிவுத் திகதி
**10-10-2018**

**அனுமதிகளுக்கு முந்துங்கள்**

info@slcj.lk
jaffnamediastudies27@gmail.com

MRI Media and Research Institute Jaffna
SRI LANKA COLLEGE OF JOURNALISM

27, புகையிரத நிலைய வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்
தொலைபேசி: 077 488 9228

96, கிருல வீதி, கொழும்பு 05
தொலைபேசி: 071 764 0015

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி விரைவில் இழப்பார் சம்பந்தன்?

தென்னிலங்கை அரசியல் வானில் அதிரடி மாற்றங்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலை கருக்கட்டி வருகின்றமை அப்பட்டமாக வெளிப்பட்டுள்ளது.

ஆட்சி அதிகாரத்தில் இருந்து ராஜபக்ஷக்களை அகற்றுவதற்கு கூட்டுச் சேர்ந்த மைத்திரி – ரணில் உறவு, இப்போது கசக்கத் தொடங்கிவிட்டது. ஒன்று சேர்ந்து ராஜபக்ஷாக்களை அதிகாரத்தில் இருந்து அகற்றிவிட்டு பதவிக்கு வந்த இந்தத் தரப்பினரின் தேன்நிலவுக் காலத்தின் இறுதி அத்தியாயங்கள் இப்போது எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றே தோன்றுகின்றது.

இந்த நல்லாட்சி அரசு இன்னும் ஒரிரு மாதங்கள் தாக்குப் பிடித்தால் கூட ஆச்சரியம்தான் என்கின்றன கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள்.

ஒரு புறம் நல்லாட்சி அரசில் அங்கம் வகித்தபடி பிரதமர் ரணிலின் ஐ.தே.கட்சி தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டு விட்டது என்ற எரிச்சல் ஜனாதிபதி சிறிசேனவுக்கு. அதே சமயம், அதே நல்லாட்சி அரசில் இடம்பெற்றிருக்கும் தனது தலைமையிலான சுதந்திரக் கட்சி மட்டும் கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு வந்து விட்டதே என்ற கவலையும் கூட அவருக்கு.

கடந்த பொதுத்தேர்தலில் 96 எம்.பிக்களுடன் நாடளுமன்றத்துக்குச் சென்ற சு.கவில் இன்று – இப்போது – ஆக 23 பேர்தான் எஞ்சியிருக்கின்றனர். மிச்சம் எல்லோரும் ஒன்றில் மஹிந்தர் தலைமையிலான கூட்டு எதிரணியின் பக்கம் தாவிவிட்டனர். அல்லது அந்தப் பக்கம் தாவத் தயாராக சு.கவிலிருந்து வெளியே வந்து விட்டனர்.

இப்படித் தனது பாரம்பரிய பரமவைரிக் கட்சியான ஐ.தே.க. ஸ்திரமாகவும் உறுதியாகவும் வளர, தான் தலைமை வகிக்கும் சு.க. மட்டும் உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாகிக் கொண்டிருப்பதைப் பார்ப்பதற்குச் சகிக்க முடியாத ஜனாதிபதி, மாற்று மார்க்கங்களை – வேறு வழிகளை – தேடுகின்றார் என்பது தெளிவு.

இன்னும் ஒரு வருட காலத்தில் எப்படியும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியாக வேண்டும் என்பது தவிர்க்க முடியாத கட்டாயம். அதற்குப் பின்னரும் தாம் பதவியில் நீடிப்பது துர்லபம் என்ற யதார்த்தத்தை உணர்ந்து கொண்டுள்ள ஜனாதிபதி சிறிசேன அதைத் தவிர்ப்பதற்கான வாய்ப்பைத் தேடித் துடியாய்த் துடிக்கின்றார். பல வழிகளையும், மார்க்கங்களையும், தந்திரோபாயங்களையும் தேடி ஒடுகின்றார்.

சாட்சிக்காரன் காலில் வீழ்வதை விட சண்டைக்காரன் காலில் வீழ்வது மேல் என்று கருதியோ என்னவோ, யாரை வெறுத்து ஒதுக்கி, தனி வழி அரசியலுக்குப் புறப்பட்டாரோ, அவரை நோக்கியே இப்போது நகர முற்பட்டிருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நேரடியாக ராஜபக்ஷக்களைப் பெயர் சுட்டாமல் விட்டாலும், பெயர் குறிப்பிடாமல் மேடை மேடையாக அவர்களைத் திட்டித் தீர்த்த ஜனாதிபதி, இப்போது அவர்களை நாடிச் சென்றே தமது அரசியலைச் செய்ய வேண்டிய இக்கட்டுக்குள் வசமாக மாட்டியிருக்கின்றார்.

ஜனாதிபதி மைத்திரிபால, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஏனைய ராஜபக்ஷாக்கள் இடையே கடந்த புதனன்று மாலையில் நடந்த சந்திப்பும் கலந்துரையாடலும் தென்னிலங்கை அரசியல் போக்கில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவரக்கூடும்.

நல்லாட்சி அரசில் இருந்து சு.க. வெளியேறிவது பெரும்பாலும் தவிர்க்க முடியாத கட்டாயமாகிவருகின்றது.

அப்படி நிகழ்ந்தால், அதன் பின்னர் ஐ.தே.கட்சி தனித்து ஆட்சி அமைக்குமா அல்லது அதனை வீழ்த்திவிட்டு சுதந்திரக் கட்சி – மஹிந்தவின் பொதுஜன பெரமுன ஆகியன தமக்குள் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்குமா என்பதுதான் கேள்வியாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பான அட்சரகணிதக் கணக்குகளின் படி சு.க. – பொதுஜன பெரமுன சேர்ந்து ஆட்சி அமைப்பதற்கு போதுமான எம்.பிக்கள் அத்தரப்பிடம் இப்போதைக்கு இல்லை என்பதே உண்மை. அதனால் தான் வருவது வரட்டும், எதிர்கொள்ளலாம் என்ற திடத்துடன் காத்திருக்கின்றது ஐ.தே. கட்சி.

எது, எப்படி என்றாலும், இந்த பிரதான இரு கட்சிகள் இரண்டில் ஒன்று ஆட்சி அதிகாரத்திலும் மற்றையது உத்தியோகபூர்வமாக எதிர்க்கட்சி அந்தஸ்திலும் விரைவில் அமரப்போகின்றன என்பது நிச்சயம்; உறுதி.

ஐ.தே.கட்சியோ அல்லது கூட்டு எதிரணி – சு.க. சேர்ந்த தரப்போ அதிகாரத்துக்கு வந்தால் மற்றத் தரப்பு உத்தியோகபூர்வ எதிர்க்கட்சி வரிசையில் அமரவேண்டிய கட்டாயம் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

அப்படியொரு ஒரு நிலைமை ஏற்படும்போது கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக தான் அலங்கரித்து நிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சம்பந்தன் இழக்க வேண்டிய இக்கட்டு தவிர்க்க முடியாததாகும்.

தென்னிலங்கையில் கருக்கட்டியுள்ள அரசியல் மேகங்கள் சூறாவளியாக மாறும்போது அரசுத் தலைமை கவிழ்கின்றதோ இல்லையோ, எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சம்பந்தன் இழக்கப் போகின்றார் என்பது மட்டும் மிக மிக உறுதியாகி வருகின்றது.

# வடக்கு – கிழக்கு வீடமைப்புத் திட்டங்களை சஜித் பிரேமதாஸவிடம் வழங்கவேண்டும்

## ஜனாதிபதியிடம் கோருகின்றது கூட்டமைப்பு









யாழ்ப்பாணம், ஒக். 09

அமைச்சர்கள் சுவாமிநாதன், மனோ கணேசனின் அமைச்சுக்களிடமுள்ள வடக்கு – கிழக்கு வீடமைப்புத்திட்டங்களைச்செயற்திறன் மிக்க அமைச்சரான சஜித் பிரேமதாஸவிடம் வழங்கவேண்டும் என்று ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

வடக்கு – கிழக்கு வீட்டுத் திட்டத்தை முன்னெடுப்பதாக 6 அமைச்சுக்கள் சொல்கின்றன. ஆனால் வீடமைப்பு அமைச்சு கட்டிமுடித்த அளவு வீடுகளைக் கூட ஏனைய அமைச்சுகளால் அமைக்க முடியவில்லை. எங்கள் மக்களுக்கு மிக நீண்ட காலமாக – குறிப்பாகப் போரால் பாதிக்கப்பட்டதன் காரணமாக வீட்டுத் தேவை மிக அத்தியாவசியத்தேவையாக இருந்துகொண்டு இருக்கிறது. அதனை நிறைவு செய்ய, செயற்திறன்மிக்கஅமைச்சரான சஜித் பிரேமதாஸவிடம் வீடமைப்புத் திட்டத்தை வழங்க வேண்டும்எனக்கேட்டுக்கொள்கின்றோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

செமட்ட செவன திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட 135ஆவது மாதிரிக் கிராமத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமைச்சர் சஜித் பிரேமதாஸ, தனது தந்தையாரின் அடிச்சுவடைப் பின்பற்றி மக்களுக்கு உறைவிடம்அமைத்துக்கொடுக்க வேண்டும் என் விடாப்பிடியோடு செயற்படுகின்ற ஓர் அமைச்சர் என்பது இந்த நாடு மட்டுமல்ல, உலகமே அறிந்த உண்மை.

1980ஆம் ஆண்டிலே ஐக்கியநாடுகள்சபையிலேஉறைவிடம் சம்பந்தமாக முன்னாள் ஜனாதிபதி, அன்று பிரதமராகவிருந்த ரணசிங்க பிரேமதாஸ ஆற்றிய உரை இன்றும்உலகம்முழுவதும் புகழ்பெற்ற ஒரு பரிந்துரையாக – யோசனையாக அனுகப்பட்டுள்ளது.

உணவு, உடை, உறைவிடம் என்கின்ற தனிமனிதனுடைய அத்தியாவசிய தேவை என்பதற்குள் உறைவிடத்தை அமைத்துக் கொடுப்பது அரசின் கடமை என்பதை உணர்த்தி செயற்பட்டு வரும் அமைச்சர் சஜித் பிரேமதாஸவை யாழ்ப்பாண மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் நாம் வரவேற்கின்றோம்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ இனவாதம் அற்ற ஒரு தலைவர் என்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கின்றோம். அது அவரோடு பழகியவர்களுக்குத் தெரியும்.

இந்த நாட்டிலுள்ள இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அன்றைக்கு பலமாக இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ரணசிங்க பிரேமதாஸ பேச்சு நடத்தியவர். அதுமட்டுமல்ல தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களையும் வழங்கினார் என்றஒருகுற்றச்சாட்டும்உள்ளது.

இந்த நாட்டில் அனைத்து மக்களும் சம உரிமையோடு வாழவேண்டும் – சிறப்பாக ஏழை மக்களுடைய நன்மைகருதி செயற்பட்ட நாட்டின் தலைவர் ரணசிங்க பிரேமதாஸ.

அமைச்சர் சஜித் பிரேதாஸவின் முயற்சியால் வடக்கு – கிழக்கில் மட்டும் 5 ஆயிரத்துக்கு அண்மித்த வீடுகள் அமைக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

போரால் பாதிக்கப்பட்டு, வீடுகள் எல்லாம் தரைமட்டமாக்கப்பட்ட பல பிரதேசங்களிலே மக்களுக்கு வீடுகள் வேண்டும் என்று நாங்கள் கடந்த அரசிடம் கேட்ட போது, எங்களிடம் பணமில்லை என்று கையை விரித்தார்கள்.

நாங்கள் அண்டை நாடான இந்தியாவை நாடினோம். தலைவர் சம்பந்தன், அப்போதைய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கேட்டதற்கு இணங்கத்தான் 50 ஆயிரம் வீட்டுத் திட்டம் வந்தது. அதில் 44 ஆயிரம் வடக்கு – கிழக்குக்குக் கொடுக்கப்பட்டன.

அதனைவிட இந்தப் புதிய அரசிடம் மிகுதி வீடுகளையும் கட்டி முடிக்கவேண்டும் என்ற மிகுந்த வாஞ்சையோடு பல திட்டங்களை நாம் முன்வைத்திருந்தபோதும்சஜித்பிரேதாஸவின் வீடமைப்பு அமைச்சினால்தான் இந்தளவு வீடுகள் கட்டி முடிக்கக் கூடியதாக இருந்துள்ளது.

நான் இன்னுமொரு விடயத்தையும் வெளிப்படையாகச் சொல்ல விரும்புகின்றேன். இது அமைச்சருக்கும் தெரிந்த ஒரு விடயம்.

வடக்கு – கிழக்கில் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு வீடமைப்பு அமைச்சு என்ற ஒரு அமைச்சு இருந்த போதிலும் வேறு மூன்று – நான்கு அமைச்சுகளுக்கு அந்தப் பணிகள் கொடுக்கப்பட்டுள்ளன. எல்லாமாகக் கணக்குப் பார்த்தால் 6 வித்தியாசமான நிறுவனங்கள் வீடுகள் அமைக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

பல தடவை நாம் கூறியுள்ளோம், வீடமைப்பாக இருந்தால் அதனை வீடமைப்பு அமைச்சிடம் விட்டுவிடுங்கள். அதற்கு வடக்கு அபிவிருத்தி அமைச்சு என்றுதேவையில்லை,நல்லிணக்க அமைச்சு என்று தேவையில்லை, வெவ்வேறு அமைச்சுகளிடம் கொடுத்து வீடுகள் அமைக்காத சூழ்நிலைதான் இதுவரை இருந்துகொண்டு இருக்கிறது.

வீடுகளைஅமைத்துக்கொடுக்கும் வீடமைப்பு அமைச்சிடம் வடக்கு – கிழக்கு வீடமைப்பு திட்டத்தைக் கொடுங்கள் என்று இந்த நாட்டின் தலைவர்களிடம் நாம் கோரிக்கை முன்வைக்கின்றோம்.

எங்கள் மக்களுக்கு மிக நீண்ட காலமாக – குறிப்பாக போரால் பாதிக்கப்பட்டதன் காரணமாக வீட்டுத் தேவை மிக அத்தியாவசிய தேவையாக இருந்து கொண்டு இருக்கிறது. அதனை நிறைவு செய்ய, செயற்திறன் மிக்க அமைச்சரான சஜித் பிரேமதாசவிடம் வீடமைப்புத் திட்டத்தை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் – என்றார். (ஐ–7)

### நாளை

10.10.2018
புதன்கிழமை
நட்சத்திரம்: சித்திரை பி.ப.12.59 வரை
திதி: பிரதமை மு.ப.8.35 வரை
சுபநேரம்: 4.32 – 06.02 வரை
இராகுகாலம்: 12.02 – 1.32 வரை

# பிள்ளைகளின் கற்றலுக்கு தடையாக இருக்காமல் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கி செயற்படுங்கள்!

## இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்னன் பெற்றோரிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக்..09

பிள்ளைகளின் கல்விக்கு தடையாக இருக்காமல், கல்விக்கு முக்கியத்துவம் வழங்கி செயற்படுமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதா கிருஷ்ணன் பெற்றோரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நுவரெலியா கந்தப்பளை கோட்லோஜ்தோட்டத்திலும், நோனாதோட்டம் மேல் பிரிவிலும் அமைக்கப்பட்ட 40 வீடுகள் நேற்று முன்தினம் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு –



நான் இலங்கை தொழிலாளர் காங்கிரசை விட்டு வெளியே வருகின்ற பொழுது என்னுடைய அரசியல் வாழ்க்கை முடிந்துவிட்டது என பலரும் கூறினார்கள். ஆனால் நான் மக்களுடன் இருந்த காரணத்தால் அவர்கள் என்னை கைவிடவில்லை. நான் அதற்கு பின்பு கல்வி இராஜாங்க அமைச்சர் பதவிக்கு உயர்ந்திருக்கின்றேன்.

மத்திய மாகாணசபையின் ஆட்சி காலம் நிறைவிற்கு வருகின்றது. எங்களை கடந்த காலங்களில் மத்திய மாகாண சபையில் வேலை செய்ய விடாமல் சில முட்டுக்கட்டைகள் போடப்பட்டன.

ஆனால், இனிமேல் நாங்கள் நேரடியாக சென்று வேலை செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் அவர்கள் வேலை செய்யவுமில்லை எங்களை வேலை செய்ய விடவுமில்லை. இது எங்களுடைய கல்விக்கு ஒரு பெரும் பின்னடைவாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

# மின்தடை

யாழ்ப்பாணம் ஒக். 09

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில் –**

அண்ணா நகர், சிறீ நகர், பூந்தோட்டம் கைத்தொழிற்பேட்டை, லக்சபான வீதி, தோணிக்கல் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில் –**

மணல்குளம், இலந்தைமோட்டை, சூரிய கட்டைக் காடு ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர் அங்கஜனுடன்

# விவசாய அமைச்சர் அமரவீர நல்லூர் ஆலயத்தில் வழிபாடு

விவசாயிகளுக்காகஏற்படுத்திக்கொடுக்கப்பட்டிருக்கும் நலன்கள் இயற்கையோடு ஒன்றித்து சிறந்த அறுவடைகள் விவசாயிக்கும் இந்த நாட்டுக்கும் கிடைக்கப்பெற வேண்டும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் பிரதி அமைச்சர் இ.அங்கஜன் ஆகியோர் நல்லூர் ஆலயத்தில் இறையாசி வேண்டிக் கொண்டனர்.

வடக்கு கிழக்கிற்கான மீள் எழுச்சி திட்டங்களுக்கு 3000 ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்கீட்டை மேற்கொண்டு விவசாயிகளினதும் இந்த நாட்டுமக்களினதும் நலன்கருதி பல்வேறு விவசாயநலத்திட்டங்களையும்நவீனகொள்கை திட்டங்களையும் முன்னெடுத்து மீண்டும் ஒரு விவசாய யுகத்தை நோக்கி பயணிக்கும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர இதன் போது தெரிவித்தார்.



இதேவேளை, கமநலசேவை நிலையங்கள் காப்புறுதி நிலையங்கள் என அடிப்படை கட்டமான வசதிகளோடு நவீன கொள்கை திட்டங்களையும் இணைத்து விவசாய திறன்கள் யுகத்தை நோக்கி இட்டு செல்லும் என்பதில் ஐயமில்லை என பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

# புத்தளத்தில் அபூர்வ தேங்காய்!

புத்தளம், ஒக்.09

இலங்கையில் வித்தியாசமான தேய்காய் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் பகுதியிலுள்ள நபர் ஒருவரின் வீட்டில் வித்தியாசமான தேங்காய் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த பகுதியைச் சேர்ந்த ஜேமிஸ் என்பவரின் வீட்டிலேயே இந்தத் தேங்காய் கிடைத்துள்ளது.



காலை உணவுக்காக தேங்காய் உடைக்கும் போது அந்த தேங்காய்க்குள் இரண்டு தேங்காய்கள் காணப்பட்டுள்ளன. வழமைக்கு மாறாக இவ்வாறு தேங்காய் காணப்படுவது மிகவும் அரிய சந்தர்ப்பமாகும்.

தான் காலை தேங்காய் உடைக்கும்போது, மிகவும் வித்தியாசமாக காணப்பட்டது. எனது வாழ்க்கையில் இப்படி ஒரு தேங்காயைப்பார்த்தமுதல்சந்தர்ப்பம் இதுவென ஜேமிஸ் குறிப்பிட்டுள்ளார்.

# புத்தளம் – மன்னார் வீதியின் போக்குவரத்து இடைநிறுத்தம்!

புத்தளம் – மன்னார் வீதி போக்குவரத்து மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது எனபுத்தளம்மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் ஏ.எம்.ஆர்.என்.கே. அலஹகோன் தெரிவித்தார்.

நாட்டில் தொடர்ச்சியாக பெய்துவரும் அடை மழை காரணமாக கலா ஓயா பெருக்கெடுத்துள்ளதால் புத்தளம் எலுவன் குளம் பாலத்திற்கு மேலாக இரண்டு அடி உயரத்தில் வெள்ள நீர் பாய்ந்து செல்கிறது என அவர் கூறினார்.

இதனால் புத்தளம்–மன்னார் வீதிஊடாக மேற்கொள்ளப்படும் அனைத்துப் போக்குவரத்துக்களும் புத்தளம் எலுவன் குளம் வரை மட்டுப்படுத்தப் பட்டுள்ளதுடன், புத்தளம் – மன்னார் பாதை யூடாக பயணிப்போர் மாற்று வழியைப் பயன்படுத்துமாறும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# 2013 இல் இலங்கை போதைப்பொருள் விற்பனை மத்தியஸ்தலமாக செயற்பட்டது!

கடந்த ஆட்சிக் காலத்தில் அதாவது 2013ஆம் ஆண்டு காலப் பகுதியில் பேதைப் பொருள் விற்பனை மத்தியஸ்தலமாக இலங்கை காணப்பட்டமையே இன்று நாட்டில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளமைக்கான காரணம் என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.

மேலும்நாட்டில்இடம்பெறுகின்ற குற்றசெயல்களை குறைப்பதற்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் நீதித்துறையை புதுப்பதற்கான பல்வேறுப்பட்ட பணிகள் இடம்பெற்று வருகின்றன என அவர் குறிப்பிட்டார்.

கண்டி நீதிமன்ற நீதிபதிகளின் சங்கத்துக்கும் நீதி மற்றும் சிறைசாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுக்குமிடையில் இடம்பெற்ற விசேட கலந்தரையாடலின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

# கொழும்பில் வாகன நெரிசல்!

மழை காரணமாக, கொழும்பின் பல வீதிகளிலும் நேற்று வாகன நெரிசல் ஏற்பட்டது.

பொரளை, காசல் வீதி, ராஜகிரிய மற்றும் நாடாளுமன்றத்தை அண்மித்த வீதிகளில் இவ்வாறு வாகன நெரிசல் ஏற்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர்.

# களனி கங்கையின் நீர் மட்டம் அதிகரிப்பு

கடும் மழையை அடுத்து களனி கங்கையின் நீர் மட்டம் அதிகரித்து வருகிறது.

களனி கங்கையின் நாகலகம் வீதிய என்ற நீர் அளவிடும் பகுதியில் நீர் மட்டம் 4 அடியினால் நேற்று முன்தினம் அதிகரித்துள்ளது.

இதனால்கொழும்பு, களனி, கொலன்னாவ, பியகம, கடுவலை ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# புலிகளின் செயற்கைக் காடுகளில் இராணுவத்தினரின் புதிய திட்டம்!



முல்லைத்தீவு – கேப்பாபிலவு பிரதான இராணுவமுகாமை சூழவுள்ள தேக்குமரக்காடுகளை பாதுகாப்பதில் படையினர் புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

சூழலை நாம் பாதுகாப்பின் சூழல் நம்மை பாதுகாக்கும், மர நிழல்தரும் குளிர்ச்சி மனதிற்கு இதமானது. போன்ற வாசகங்களை பெரிய கருங்கற்களில் எழுதி காட்சிப்படுத்தியுள்ளனர்.

2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தில் வனவள பாதுகாப்பு பிரிவினரால் முல்லைத்தீவில் பல்வேறு இடங்களில் தேக்குமரங்களை நட்டு செயற்கை காடுகளை உருவாக்கியிருந்தனர்.

இந்த நிலையில், இறுதியுத்தத்தின் பின்னர் சட்டவிரோதமாக இந்த மரங்கள் வெட்டி அழிக்கப்பட்டமையுடன் சில பகுதிகளில் திட்டமிட்டு தீ மூட்டி அழிக்கப்பட்டன எனத்தெரிவிக்கப்படுகிறது.

அன்மையில் கேப்பாபிலவு பிரதான இராணுவ முகாமை சூழவுள்ள தேக்கங்காட்டு பகுதியில் தீபரவல் ஏற்பட்டிருந்தது. 59 ஆவது படைப்பிரிவு இராணுவத்தினர் சம்பவ இடத்திற்கு விரைந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இந்த நிலையில் கேப்பாபிலவு பிரதான இராணுவமுகாமைச் சூழவுள்ள தேக்கமரக்காடுகளை பாதுகாப்பதற்காக படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வெங்காய செய்கையாளருக்கு இழப்பீடு

தம்புள்ளை பகுதியில் பாதிக்கப்பட்ட பெரிய வெங்காய செய்கையாளர்களுக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

செய்கைபண்ணப்பட்டு மழை காரணமாக பாதிக்கப்பட்ட தம்புள்ளை பெரிய வெங்காய செய்கையாளர்களுக்கே இந்த இழப்பீடு வழங்கப்படவுள்ளது என்றும் விவசாய அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ஹெக்டேயருக்கு ஒரு லட்சம் ரூபா வீதம் இழப்பீடு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது

# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு!

கடந்த வருடத்துடன் ஒப்பிடு கையில் இந்த வருடம் செப்டெம்பர் மாதத்தில் சுற்றுலாப் பயணிக ளின் வருகை அதிகரித்துள்ளது என சுற்றுலா சபை தெரிவித்துள் ளது. இது 2.8 சதவீத அதிகரிப் பாகும்.

இந்த வருடத்தின் முதல் 9 ம ாத காலப்பகுதியில் பத்து லட்சத்து 73 ஆயிரம் வெளிநாட்டு சுற்று லாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

இந்தத் தொகை கடந்த வருடத் துடன் ஒப்பிடுகையில் 11. 6 சதவீத அதிகரிப்பாகும்.

சீனா, இந்திய, பிரிட்டன், ஆஸ் திரேலியா, ஜேர்மன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளே பெரும் எண்ணிக் கையில் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# தினசரி ராசி பலன் (09.10.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் புரட்டாதி 23 ஆம் நாள் செவ் வாய்க்கிழமை. அமாவாசைத்திதி காலை 9.17 வரை. பின்னர் பிரதமை. நட்சத்திரம் அத்தம் பகல் 12.04 வரை பின்னர் சித்திரை. சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை 2.56 மணி முதல் 4.26 மணி வரை.

**சுபநேரம்** - பகல் 10.33 மணி முதல் 12.03 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - புரட்டாதி மாத வளர்பிறை பிரதமை இன்று நவராத்திரி ஆரம்பம்.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - அத்தம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேம்படும். வியாபாரத் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். அரசாங்க காரியம் அனுகூல மாக அமையும்.

**ரிஷபம்** அனுகூலமான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். புதிய தொழில் முயற்சிகள் நற்பலன்களைத் தரும் குடும் பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும் பெண்களுக்கு நற் பலன் கள் உண்டாகும்.

**மிதுனம்** சலனம் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் சலசலப்பு உண்டாகும். உடலில் ரோகங்கள் உண்டாகும். தொழிலில் கடின உழைப்பு இருப்பினும் பலன் குறையும்.

**கடகம்** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். வேலை தேடுவோருக்கு பெரும் முயற்சியின் மேல் வேலை கிடைக்கும். வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும்.

**சிம்மம்** யோகமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும். சொந்த வீடு வாங்கும் எண்ணம் சிலருக்கு நிறைவேறும் சகோதர வழியால் எதிர்பாராத அதிர்ஷ்டம் கிடைக்கும்.

**கன்னி** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்பத்தில் ஒற்றுமையுணர்வு நீடிக்கும். வியாபாரம் மேன்மை அடையும் உத்தியோகத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு என்பன கிடைக்கும்.

**துலாம்** சஞ்சலமான நாள். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமா கும். நினைத்தவை கைகூடாமற் போகும். குடும்பத்தில் வீண் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். உறவினர்கள் நண்பர்கள் தொல்லை தருவார்கள்.

**விருச்சிகம்** ஆக்கபூர்வமான நாள். பண வரவு திருப்தி தரும். குடும்பத் தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் ஆக்கபூர்வ முன்னேற்றம் அடையும் விவ சாயம் நல்ல ஆதாயத்தைத் தரும்.

**தனுசு** மத்திமமான நாள். வரவுக்கு மீறிய செலவு உண்டாகும். எண்ணிய காரியம் தாமதத்தின் பின் நிறைவேறும். உடலில் உபாதைகள் உண்டாகி மருத்துவச் செலவுகள் உண்டாகும்.

**மகரம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். சகோதர உறவு வலுவடையும். சில புண்ணிய தல யாத்திரை மேற்கொள்வார்கள்.

**கும்பம்** தீமையான நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும் பத்தில் சச்சரவுகள் உண்டாகும். தொழில் செய்யும் இடங் களில் இடையூறுகள் உண்டாகும். செய்த குற்றத்திற்கு தண்டனை அனுபவிக்க நேரும்.

**மீனம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் பணி சுமை அதி கரிக்கும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் எடுக்க வேண்டும்.

**சந்திராஷ்டம நாள்: அவிட்டம் 3 ஆம், 4ஆம் பாதங்கள், சதயம், பூரட் டாதி 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங் கள் தொடங்கு வதைத் தவிர்க்கவும்.**

# பொது மன்னிப்பு வழங்கி அரசியல் கைதிகளை ஜனாதிபதி மைத்திரி விடுதலை செய்ய வேண்டும்!

## கோடீஸ்வரன் எம்.பி. வேண்டுகோள்

அரசியல் கைதிகளாக குடும்ப உறவுகளை பிரிந்து சிறைகளில் வருடக் கணக்கில் துன்பப்படும் தமிழ் அரசியல் கைதிகளை ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அம் பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ் வரன் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் தம்பிலுவில் றேங்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 31ஆவது ஆண்டு நிறைவுநாள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி நாள் நிகழ் வில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்–

இந்த நாட்டில் யுத்த குற்றம்



இழைத்தவர்கள் சுதந்திரமாக உலாவரும் நிலையில் மக்க ளின் விடுதலைக்காக போராடிய வீரர்கள் சிறைகளில் வாடுகின் றார்கள். அவர்கள் விடுதலை செய்யப்பட்டு குடும்பங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி அவர் கள் அனைவருக்கும் நாம் மதிப்பளிக்கும், அதேவேளை அவர்களின் விடுதலைக்காக பாடுபட வேண்டிய கடமைப்பாடு நமக்கு இருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் ஒலுவில் தொடக்கம் பொத்து வில் வரையான கடலோர பிரதேசங்களில் அச்சுறுத்த லாக இருந்த இல்மனைட் அகழ்வை ஜனாதிபதியுடன் கலந்துரையாடி தடுத்து நிறுத்தி இருக்கின்றேன்.

இந்த நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கான விடுதலையைப் பெற்றுக் கொடுப்பதற்காக அர சுடன் போராடும் அதேவேளை, அரசுடன் இணைந்து அபி விருத்தி வேலைத் திட்டங்க ளையும் முன்னெடுத்து வரு கின்றோம்.

இதனை தமிழ் மக்கள் நன்கு புரிந்து கொண்டு தொடர்ந்தும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு தங்களில் ஒத்துழைப்புக்களை வழங்கி கட்சியைப் பலப்படுத்த வேண் டும் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

# பொலிஸாரின் திடீர் சுற்றிவளைப்பில் ஹெரோயின், கஞ்சாவுடன் மூவர் கைது

பல்வேறுபட்ட பிரதேசங் களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களின்போது ஹெரோயின் மற்றும் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பில் மூன்று பேர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

மேற்படி சுற்றிவளைப்புக் கள் நேற்று முன்தினம் பொலன்னறுவை, திக்வெல்ல மற்றும் கெசல்வத்தை ஆகிய பகுதிகளிலேயே பதிவாகியுள் ளன.

பொலன்னறுவை போதைப் பொருள் தடுப்பு பிரிவினருக்கு இரவு 8.05 மணியளவில் கிடைக்கப்பெற்ற தகவலுக்க மைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 100 கிராம் கஞ்சா மற்றும் 20 வெடிகுண்டு வெடிப்பதற்கு பயன்படுத்தப்படும் இலத்திர னியல் கருவிகள் என்பன வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் 34 வயது டையபொலன்னறுவைபிரதேசத்தை சேர்ந்தவர் என விசாரணை களின் போது தெரிய வந்துள் ளதுடன், பொலன்னறுவை பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், கெசல்வத்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 2 கிராம் 50 மில்லிகிராம் ஹெரோ யின் போதைப்பொருளுடன் கொழும்பு 12 ஐச் சேர்ந்த 25 வயதுடைய அப்புகாமிலாகே சமீர சம்பத் எனபவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், திக்வெல்ல பகுதி யில் 2.30 மணியளவில் மாத்தறை பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்க மைய மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது, 25 போதைப்பொருள் வில்லை கள் அடங்கிய 43 பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த கஞ்சா போதைப் பொருளின் மொத்தப் பெறுமதி 11 கிலோகிராம் என தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர் பத்தேகம, கொட்டகொட பகுதியைச் சேர்ந்த 80 வயதுடையவர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. மேல திக விசாரணைகளை பொலி ஸார் மேற்கொண்டு வருகின் றனர்.

# அரசியல் சூழ்நிலையை மாற்றுவது அனைவரினதும் முக்கிய கடமை!

## மக்கள் விடுதலை முன்னணி கூறுகிறது

நுவரேலியா, ஒக்.09

தற்போது நிலவும் அரசி யல் சூழ்நிலையை மாற்று வது இந்தநாட்டின் அனைத் துப் பிரஜைகளினதும் கடமை என மக்கள் விடு தலை முன்னணி தெரிவித் துள்ளது.

இதற்காக தங்களுடை கட்சி முனைப்புடன் இருக் கிறது என்றும் மக்கள் விடுதலை முன்னணியில் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித் துள்ளார்.

நுவரெலிய பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன் றின் போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

# யாழ் சின்மயாமிஷனில் கந்தபுரான அருளுரை

யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா அவர் களால் உடன்கட்டை ஏறுதல் என்ற தலைப்பில் இன்று மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை இல 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் ஆச்சிர மத்தில் கந்தபுராண அருளுரை நடைபெற உள்ளது.

யாழ். சின்மயா மிஷன் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றது.

# வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க ரூ.900 கோடி ஒதுக்கீடு!

வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்க ளுக்கு எதிர்வரும் சில மாதங்களில் நிவார ணங்களை வழங்குவதற்காக 900 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள் ளார்.

நான்கு லட்சத்து 25 ஆயிரத்திற்கும் மேற் பட்டோர் வறட்சி காலநிலையால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

அனுராதபுரம் – எலயாயபத்துவ, என்ற இடத்தில் இடம்பெற்ற மறுசீரமைப்புப் பணி கள் தொடர்பான ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனை தெரிவித் துள்ளார்.

# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு மீனவர்கள் போராட்டம்!






அட்டாளைச்சேனை, ஒக்.09

ஒலுவில் துறைமுக கடற்றொழிலாளர்கள் தமக்கான தீர்வை வழங்குமாறு தெரிவித்து அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு பிரதான வீதியை மறித்து நேற்று ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர்.

ஒலுவில் துறைமுகத்தின் வாயிலில் குவிந்துள்ள மணலை அகற்றுமாறு தெரிவித்து கடந்த இரு தினங்களாக மீனவர்கள் துறைமுகம் முன்பாக போராட்டம் நடத்தி வந்ததை அடுத்து நேற்றுக் காலை முதல் பிரதேச செயலகம் முன்பாக பிரதான வீதியில் மீன்பிடிப் படகுகளை வைத்து நூற்றுக்கணக்கான மீனவர்கள் இப்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இப்போராட்டத்தின் காரணமாக கல்முனை, அக்கரைப்பற்று பிரதான வீதியூடான போக்குவரத்து தடைப் பட்டுள்ளதை அடுத்து பொலிஸார் உள்வீதியூடாக மாற்றுப் பாதை ஊடாக போக்கு வரத்தை மாற்றி அமைத்தனர்.

இதனால் கனரக வாகனங்கள், பஸ், லொறி போன்ற வாகனங்கள் குறித்த வீதியால் பயணிக்க பெரும் சிரமத்தினை எதிர் கொண்டன காரியாலயம் செல்லும் ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பயணிகள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கினர்.

துறைமுகத்தில் குவிந்துள்ள மணலை அகற்ற வந்திருந்த கப்பல் திருப்பி அனுப்பப்பட்டதை அடுத்து, கடற்றொழிலாளர்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

கல்முனை முதல் பொத்துவில் வரை சுமார் 2 ஆயிரத்து 800 மீனவர்கள் இத்துறைமுகத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்றும் தற்போது ஏற்பட்டுள்ள தடையினால் அவர்களது குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப் பட்டுள்ளது என்றும் தெரிவிக்கின்றனர்.

(கு)

## புலமைப் பரிசில் பரீட்சையில் 79 வீத மாணவர்கள் சித்தி!

கொழும்பு, ஒக்.09

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 79.09 வீத மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர் என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டில் இது 69 வீதமாக காணப்பட்டதுடன், இந்த ஆண்டு பத்து வீதத்தால் பரீட்சையில் சித்தி அடைந்தோரின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது.

வினாத்தாள் ஒன்று மற்றும் வினாத்தாள் இரண்டு ஆகியனவற்றில் 35 புள்ளிகளுக்கு அதிகமாக பெற்றுக் கொள்ளும் அனைவரும் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

இந்த ஆண்டில் மூன்று லட்சத்து ஐம்பதாயிரத்து நூற்றி தொன்னூற்று ஒரு மாணவ, மாணவியர் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

இதேவேளை, மாவட்ட ரீதியான வெட்டுப் புள்ளிகளை விடவும் அதிகளவு புள்ளிகளை பரீட்சைக்குத் தோற்றிய 10.32 வீதமான மாணவ, மாணவியர் பெற்றுக் கொண்டுள்ளனர் என்று பரீட்சை திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித கொழும்பு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

## நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக ஆறுகள் மற்றும் நீர் நிலைகளின் நீர் மட்டம் உயர்வு



நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக ஆறுகள் மற்றும் நீர் நிலைகளின் நீர் மட்டம் அதிகரித்துள்ளமையால் அந்தப் பகுதிகளில் வாழும் மக்களை அவதானமாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

அந்த வகையில் களுகங்கை, களனி கங்கை, ஜின் கங்கை, நில்வளா மற்றும் அத்தனலு ஓயா ஆகியவற்றின் நீர்மட்டம் அதிகரித்து வருவதுடன் களுகங்கைக்கு அண்மித்ததான மதுராவல, ஹொரணை, புளத்சிங்கல, இங்கிரிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட மக்களுக்கும் ஜின் கங்கைக்கு அண்மித்த பிரதேசங்களான பத்தேகம, நாகொட, வெளிவிட்ட தவலம, நெலுவ ஆகிய பிரதேசங்களுக்கும் வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

மேலும், களனி கங்கையின் நீர்மட்டம் அதிகரித்து வருவதனால் கடுவள, பியகம, களனி, கொலன்னாவ பிரதேசங்களுக்கும், அத்தனகலு ஓயாவுக்கு அண்மித்த பிரதேசங்களான நீர்கொழும்பு மினுவன்கொட, ஜாஎல, கம்பஹா பிரதேச செயலகங்களுக்கும் வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில் சீரற்ற வானிலையினால் ஏற்படும் அனர்த்தங்களிலிருந்து மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 1200 படையினர் தயாராகவுள்ளனர் என இராணுவம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கையைச் சேர்ந்த யுவதி இத்தாலியில் தற்கொலை

இலங்கையில் இருந்து ஐரோப்பிய நாடொன்றுக்கு சென்ற யுவதி ஒருவர் தற்கொலை செய்துள்ளார் என அந்த நாட்டு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இத்தாலியில் பணிசெய்து வந்த இளம் யுவதி ஒருவர் விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளார் என செய்தி வெளியாகியுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்த யுவதி இலங்கை வந்திருந்தார். மீண்டும் இத்தாலிக்குச் சென்றிருந்த நிலையில் தற்கொலை செய்துள்ளார்.

4 வருடங்களாக இளைஞர் ஒருவருடன் காணப்பட்ட காதல் தொடர்புக்கு, பெற்றோர் எதிர்ப்பு வெளியிட்டமையினால் இவ்வாறான முடிவக்கு வந்துள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

அத்துருகிரிய பிரதேசத்தை சேர்ந்த 24 வயதான யுவதி ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மண்மேடு சரிந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயம்: தொடர்கிறது சிவப்பு எச்சரிக்கை



சீரற்ற காலநிலைக் காரணமாக நாட்டில் பல பாகங்களுக்கும் விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

அதன்படி பெரியளவில் பாதிக்கப்பட்டிருக்கும் களுத்துறை மாவட்டத்தின் வலல்லாவிட்ட, புளத்சிங்கள, மத்துகம, பதுரலிய மற்றும் இங்கிரிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் காலி மாவட்டத்தில் தவலம மற்றும் தவக்கலமுள்ள பிரதேசங்களுக்கும் விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை தொடர்ந்தும் அமுல்படுத்துப்பட்டுள்ளது.

இதேவேளை, பதுளை கொழும்பு பிரதான வீதியின் பல இடங்களில் மண் மேடுகள் சரிந்ததில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது. அத்துடன், தொடர்ந்து மழை பெய்யுமானால் மண்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதாக தேசிய கட்டடவியல் ஆய்வுநிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் களுத்துறை, நேபட பகுதியில் உள்ள இரண்டு வீடுகளின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதன்போது 6 வயதுடைய பெண் பிள்ளை உட்பட 3 பெண்களும் ஆண் ஒருவருமே இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என களுத்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

## முன்னாள் சட்டமா அதிபர் ஷிப்லி அஸீஸ் காலமானார்

முன்னாள் சட்டமா அதிபரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான ஷிப்லி அஸீஸ் காலமானார். தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், தனது 75 ஆவது வயதில் அவர் காலமானார்.

இலங்கைசட்டத்தரணிகள் சங்கத்தில் முக்கிய பல பதவிகளை வகித்த ஜனாதிபதி சட்டத்தரணி ஷிப்லி அசீஸ், அரசமைப்பு சபையின் உறுப்பினராகவும் செயற்பட்டு வந்தார்.

சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எச்.ஏ. அஸீஸின் புதல்வரான ஷிப்லி அஸீஸ் பல ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் உறுப்பினராகவும் செயற்பட்டுள்ளார்.

காலஞ்சென்ற ஜனாதிபதி சட்டத்தரணி ஷிப்லி அஸீஸின் ஜனாஸா, ராஜகிரிய, லேக் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு ஜாவத்த முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

## 2019 ஆம் ஆண்டு தேசிய பொருளாதாரம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும்!


பந்துல குணவர்தன தெரிவிப்பு

2019 ஆம் ஆண்டு தேசிய பொருளாதாரம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் எனத் தெரிவித்த கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன, இதன் காரணமாக தேசிய உற்பத்திகளின் விலைகள் கூட உயர்வடையும் நிலை தோற்றம் பெறும் என்றும் தெரிவித்துள்ளார்.

தேசிய பொருளாதார நெருக்கடி, டொலருடன் ஒப்பிடுகையில் ரூபாவின் தொடர்ச்சியான வீழ்ச்சி போன்றவற்றிற்கு தீர்வு காண்பது தொடர்பிலான கலந்துரையாடலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொதுஜன பெரமுனவின் முக்கிய தரப்பினருக்கு அழைப்பு விடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

காலைக்கதிர்
Kalaikkathir



"இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி சிதம்பரநாதன் முகுந்தன் அவர்களின் பணிகளை நயந்து தென்மராட்சி மக்கள் முன்னெடுத்திருந்த மதிப்பளிப்பு விழா தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபம், சிவன் கோவிலடி, சாவகச்சேரியில் கடந்த ஞாயிறன்று நடைபெற்றது. நிகழ்வில் வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வி.வின்னேஸ்வரன் உரையாற்றினார். அதன் விவரம் இங்கு பிரசுரமாகியுள்ளது"

## தென்மராட்சி மண்ணின் மைந்தன்

# இருதய சத்திர சிகிச்சை நிபுணர் முகுந்தனின் மகோன்னத சேவை

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குப் பெருமை சேர்க்கும் வகையிலும் இப்பிரதேசத்தில் வறுமை நிலையிலுள்ள இருதய நோயாளிகளின் நீண்டகாலத் தேவையை நிறைவேற்றும் வகையிலும் யாழ் போதனா மருத்துவமனையில் தாமாகவே முன்வந்து இருதய சத்திர சிகிச்சைக்கான விசேட சத்திரசிகிச்சைக் கூடம் ஒன்றை அமைத்தவர் இன்றைய பாராட்டுக்கு உள்ளாகும் வைத்திய கலாநிதி முகுந்தன் அவர்கள். அதற்குரிய விசேட ஆளணியையும் உருவாக்கி அவர்களுக்கான பயிற்சிகளைத் தமது நேரடி ஒழுங்கில் கொழும்பில் உள்ள இவ்வாறான சத்திரசிகிச்சைக் கூடங்களில் பெற்றுக் கொடுத்தவரும் அவரே.

யாழ் போதனா மருத்துவமனையில் இருதய மாற்று சிகிச்சை முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கில் ஒரு வருடத்திற்கு மேலாக முனைப்புடன் பல ஆயத்தங்களை செய்து 2017ம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ் போதனா மருத்துவமனையில் மிகக் குறைந்த உபகரண, ஆளணிவசதிகளுடன் இருதய மாற்று சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளார் அவர். எமது மக்களிற்கும் இந்த மண்ணிற்கும் வலுச் சேர்த்துள்ளார் எங்கள் அன்பிற்குரிய இருதய சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி சிதம்பரநாதன் முகுந்தன் அவர்கள். அவரைப் பாராட்டிக் கௌரவிக்கின்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உங்கள் முன் உரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன்.

நல்ல மனிதர்களின் நற்பணிகளை வாழ்த்தும் சமூகமே நலமுற்று வாழும். நன்றி உணர்வு தமிழ் மக்களுடைய பண்பாடுகளில் மிக முக்கியமானது. இதனால் தான் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு என்று வள்ளுவப் பெருந்தகை குறிப்பிட்டார். இன்றைய காலகட்டத்தில் சுயநல மேலீட்டால் எங்களுள் பலர் நன்றி மறந்து வாழத் தலைப்பட்டு விட்டோம். கடந்த போர்க் காலம் அதற்கொரு காரணமோ நான் அறியேன். பிறரின் நல்ல குணங்களை நல்ல செயல்களைப் பாராட்ட எமக்குப் பிடிப்பதில்லை. யார் உவர்? அவருக்கு என்ன தெரியும்? என்று எந்த நேரமும் மற்றவர்களை இழுக்குடன் குறிப்பிடும் வழக்கமே மேலோங்கியுள்ளது. ஒருவரின் நல்ல குணங்களை, திறமைகளை, திறன்களை கண்டவுடன் பாராட்டும் குணம் எம்முள் உதிக்க வேண்டும். பாராட்டு வேண்டுமிடத்தில் பாராட்டைப் பொழிய வேண்டும் என்றே எமது பாரம்பரியம் கூறுகின்றது.

மட்டுவில் கிராமத்தில் நடுத்தர குடும்பத்தில் அவதரித்த வைத்தியகலாநிதி முகுந்தன் அவர்கள் சிறுவயதில் இருந்தே தனது கல்வியில் ஆர்வம் காட்டி க.பொ.த உயர்தர கற்கைநெறியில் முதல் ஒரு வருடம் கணிதத்துறையில் கல்வி கற்று அதன் பின்னர் மருத்துவத்துறைக்கு மாறி க.பொ.த உயர்தரப் பரீட்சையில் முதற்தடவையிலேயே மருத்துவத் துறைக்கு தேர்வாகி யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் தமது மருத்துவ கற்கைநெறிகளை சிறப்பாக நிறைவு செய்தார். அதன் பின் கொழும்பு பல்கலைக்கழகம், நியூசிலாந்து பல்கலைக் கழகம் ஆகியவற்றில் விசேட பட்ட பின் படிப்புக்களை நிறைவு செய்து இன்று ஒரு துறைசார்ந்த விற்பன்னராக விளங்குகின்றார் என்றால் அது அவரின் தொடர்ச்சியான விடா முயற்சிக்கும் எதிர்பார்ப்பிற்கும் கிடைத்த ஒரு வெற்றி என்றே கூற வேண்டும். இந் நிலையில் அவருக்கு இன்று வழங்கப்படுகின்ற கௌரவம் ஒரு நிறைவான கௌரவமாக அனைத்து மக்களின் உள்ளக் கிடக்கைகளை வெளிக்காட்டுகின்ற உணர்வுபூர்வமான ஒரு நிகழ்வாக அமைந்திருப்பதையிட்டு நான் பெரிதும் மகிழ்வடைகின்றேன்.



விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கு ஒப்பாக வைத்திய கலாநிதி முகுந்தன் அவர்கள் யாழ் மருத்துவபீடத்தில் மருத்துவத் துறையில் மாணவனாக இருந்த காலத்திலேயே அவரின் அதீத திறமைகள் பற்றி அக்காலத்தில் யாழ் போதனா மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை நிபுணர்களாக இருந்த வைத்திய நிபுணர்கள் தம்மிடையே பேசிக் கொண்டனர் என சிலர் எனக்குத் தெரிவித்திருந்தனர்.

இவ் உலகில் அவதரிக்கின்ற மக்களில் ஒரு தொகுதியினரே செல்வச் செழிப்புடன் வாழ்கின்றார்கள். அவ்வாறு செல்வ மிகுதியில் வாழும் மக்களில் மிகச் சொற்பமானவர்களே தம்மிடம் இருக்கக்கூடிய செல்வத்தில் ஒரு பகுதியை ஏழை எளியவர்களுக்கு வழங்கக்கூடிய நல்ல மனதைக் கொண்டிருக்கின்றார்கள். அறிவும் திறமையும் கூட அவ்வாறுதான். சிலரே தமது அறிவையும் திறமைகளையும் மற்றோருக்கு உதவி செய்யும் விதத்தில் பாவிக்க வேண்டும் என்று நினைக்கின்றார்கள்.

வைத்திய கலாநிதி முகுந்தன் அவர்கள் பணம் உழைக்கின்ற எதிர்பார்ப்பை முதன்மைப்படுத்தி இருப்பாரேயாயின் உலகில் உள்ள எந்தவொரு நாட்டிலும் இவர் தனது சேவையைத் தொடர்ந்திருக்க முடியும். அங்கு கோடி கோடியாக பணஞ் சம்பாதித்திருக்க முடியும். ஆனால் அவர் இவற்றையெல்லாம் விரும்பாது தனது மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற உயரிய நோக்கிலே கொழும்பில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அவரின் குடும்ப உறுப்பினர்களை அங்கேயே விட்டு விட்டு தனி ஒருவராக இந்த மண்ணில் சேவை ஆற்றிவருகின்றார். அவர் ஆற்றும் சேவையின் பிரதிபலிப்பே இவ்வளவு மக்களின் இன்றைய பிரசன்னம். மக்கள் மனங்களை வென்ற அவரை இன்று தென்மராட்சி மக்கள், தமது மண்ணின் மைந்தன் என்று உரிமையுடன் பாராட்டிக் கௌரவிக்க முன்வந்திருக்கின்றார்கள். இதுவே அவரின் உழைப்பிற்குக் கிடைத்த மதிப்பிட முடியாத ஊதியமாகும்.

நல்ல பணிகளை ஆற்றுகின்ற மக்களுக்கு சில எதிர்ப்புக்கள் வரத்தான் செய்யும். வடமாகாண முதலமைச்சர் அதற்கொரு உதாரணம். எனினும் தடைகளைத் தாண்டி முனைப்புடன் முன்னேற இந்தளவு பெரிய மக்கட் கூட்டமும் சமூக அமைப்புக்களும் தனக்குப் பின்னால் இருப்பதை வைத்திய கலாநிதி முகுந்தன் மறந்து விட மாட்டார் என்று நம்புகின்றேன்.

வைத்திய கலாநிதி முகுந்தன் அவர்கள் யாழ் போதனா மருத்துவமனையில் 2017 மார்கழி 20 ஆம் திகதி திறந்த இருதய சத்திர சிகிச்சைக் கூடத்தை வெற்றிகரமாகத் திறந்து அதை நடத்திச் சென்றதைப் பாராட்டும் முகமாக கொழும்பிலிருந்து சுகாதார சேவைகள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் வைத்திய சேவைகள் பணிப்பாளர் நாயகம் இருவரும் நேரடியாக இங்கு சமூகமளித்து சத்திரசிக்சைக்கு உட்படுத்தப்பட்ட நோயாளர்களுக்கு பழக்கூடைகளை வழங்கியும் வைத்திய நிபுணருக்கு மலர்க்கொத்துக்கள் வழங்கியும் கௌரவித்துச் சென்றமையை அனைத்துப் பத்திரிகைகளும் பிரசுரித்திருந்தன.

"இங்கு கூடியிருக்கும் மக்கள் கூட்டமே அவரின் உழைப்புக்கும் கிடைத்த மதிப்பிட முடியாத ஊதியமாகும்"


இவ்வாறு திறமை மிக்கவர்கள் கொழும்புத் தலைமைகளினால் மதிப்புடன் உற்று நோக்கப்படுகின்றார்கள். எம்மவராலோ அவர்கள் பொறாமையுடன் நோக்கப்படுகின்றார்கள். ஆனால் உலகம் கூட திறமை மிக்கவர்களை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கும் பல செய்திகளை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். சில காலத்திற்கு முன்பு இலங்கையின் புகழ்பூத்த மருத்துவ நிபுணர் ஒருவர் அமெரிக்காவுக்கு சென்று வருவதற்காக விமானப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இடையில் இரண்டாவது விமானத்திற்காக காத்திருந்த வேளையில் அவரை ஒரு வெளிநாட்டவர் அணுகி பேச்சுக் கொடுத்திருக்கின்றார். சிநேக பூர்வமாக ஆரம்பித்த பேச்சு பின்னர் இவரின் விவரங்களைத் துழாவுகின்ற பேச்சாக மாறி ஏன் நீங்கள் அமெரிக்காவில் நிரந்தரமாக குடியேறக்கூடாது? என்ற பாணியில் சென்றதாம். அந்த வைத்திய நிபுணர் தமது பிள்ளைகள் இலங்கையில் கல்வி கற்கின்றார்கள் அதனால் குடிபெயர்வுக்குச் சாத்தியமில்லை என்று தெரிவித்த போது அந்த குறிப்பிட்ட வெளநாட்டவர் இவரின் பிள்ளைகளின் பெயர்கள் முதற்கொண்டு அவர்களின் கல்வித் தராதரம், தற்போதைய நிலை, மொழி அறிவு ஆகிய சகல விடயங்களையும் அடுக்கிச் செல்ல வைத்திய நிபுணருக்கு மலைப்புஏற்பட்டுவிட்டது. பின்னர் விசாரித்ததில் அவர் ஓர் அமெரிக்க உளவு அதிகாரி என்பது தெரிய வந்ததாம். அதாவது சாதாரணமாகப் பயணம் செய்கின்ற ஒரு கல்விமானைப் பற்றிக் கூட அவர்கள் எவ்வளவு தூரம் அறிந்து வைத்திருக்கின்றார்கள் என்று தெரிய வந்தது.

ஆனால் எமக்கு இந்த அருமை பெருமைகள் தெரிவதில்லை. கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 20ம் திகதியில் இருந்து இன்று வரை 65 பேருக்கு திறந்த இருதய அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கின்றார் வைத்திய கலாநிதி முகுந்தன் அவர்கள். அதிலும் இருவரின் நிலை மிக மோசமாக இருந்தது. அச் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள கொழும்பில் உள்ள பிரத்தியேக வைத்தியசாலைகளில் உள்ள வைத்திய நிபுணர்கள் தயக்கம் காட்டினார்கள். இவர் தனியொருவராக அந்த இரண்டு சத்திர சிகிச்சைகளையும் வெவ்வேறு திகதிகளில் மிகத் திருப்திகரமாக மேற்கொண்டு வெற்றிவாகை சூடினார்.

அன்பான வைத்திய நிபுணர் அவர்களே!

உங்கள் சேவைக்காக மக்கள் காத்துக் கிடக்கின்றார்கள். இருதயம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும் அறுவைச் சிகிச்சைக்கு பணமின்றி பலர் எம்மிடம் வருகின்றார்கள். முடிந்தளவு சிறு சிறு உதவிகளைப் புரிகின்றோம். முழுமையாக உதவ முனைகின்ற போது போதுமான நிதி கையிருப்பில் இல்லை என்பது வருத்தத்திற்குரியது. இவ்வாறான வறுமை நிலையில் உள்ளவர்களைக் காப்பாற்ற ஒரு நிதியை ஏற்படுத்தினால் என்ன என்று தோன்றுகின்றது. அரசாங்க மருத்துவ மனைகளில் இனாமாக சிகிச்சை அளித்தாலும் உங்களால் சிகிச்சை வழங்க முடியுமான நோயாளர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையினரே. மற்றவர்கள் தனியார் மருத்துவ மனைகளில் பணம் கட்டியே சிகிச்சை பெற வேண்டும். அதற்கேதுவாக குறிப்பிட்ட நிதியம் பண உதவி செய்யலாம்.

நம்பிக்கை நட்சத்திரமாக திகழக்கூடிய உங்கள் சேவை எமது இருதயம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்தும் கிடைக்க வாழ்த்தி இலங்கையில் கிடைக்கக்கூடிய அதி உயர் கௌரவமான ஜனாதிபதியின் அதியுயர் விருது தங்களுக்கு கிட்ட வேண்டும் எனவும் வாழ்த்தி எனது உரையை நிறைவு செய்கின்றேன்.



# குருபெயர்ச்சிப் பலன்கள்

## 04.10.2018 முதல் 28.10.2019 வரை

**விளம்பி வருட குருப்பெயர்ச்சி கடந்த 4 ஆம் திகதி இரவு 10.05 மணிக்கு இடம்பெற்றது. குருபகவான் துலா இராசியிலிருந்து விருச்சிக இராசிக்கு மாறுகிறார். பன்னிரண்டு இராசிக்காரர்களுக்குமான பலன்கள் தொடர்ந்து வெளியாகும்.**



## கும்பம்

### (அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 பாதங்கள்)

**கிரகநிலை:**
அக்டோபர் - 04 - 2018 அன்று இரவு 10.05 மணிக்கு குரு பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறியுள்ளார்.

**பலன்:**
உழைப்பினால் முன்னேற்றத்தைக் காண துடிக்கும் கும்ப ராசி அன்பர்களே! இது நாள் வரை ஒன்பதாம் இடமான பாக்கியஸ்தானத்தில் இருந்த குருபகவான் பத்தாம் இடமான தொழில் ஸ்தானத்திற்கு பெயர்ச்சி ஆகி வருகிறார். அவர் அங்கிருந்து ஐந்தாம் பார்வையாக தனம், வாக்கு குடும்ப ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையாக சுகஸ்தானத்தையும், ஒன்பதாம் பார்வையாக ஆறாமிடமான ரண, ருண, ரோக , சத்ரு ஸ்தானத்தையும் பார்த்து அருள் புரியப் போகிறார்.

குடும்பத்தைப் பொறுத்தவரை உங்களுடைய குடும்பாதிபதியும் குரு ஆகையால் அந்த இடத்தை குரு பகவானின் பார்வை படுவதாலும் குடும்பம் சுபீட்சமாகவும், ஆனந்தமாகவும் இருப்பதில் எந்த ஐயமும் இல்லை. குடும்பத்தில் திருமண வயதில் உள்ளவர்களுக்கு திருமணம் நிச்சயமாகும். அனைவரும் திருப்தியாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதற்கான சூழ்நிலைகள் உள்ளன. செல்வாக்கும், சொல்வாக்கும் மிகுதியாகும்.

தொழிலில் எந்த ஒரு பிர்ச்சினைகளும் இருக்க மட்டா. சக பங்குதாரர்களும் உங்கள் பேச்சில் கட்டுப்பட்டு இருப்பார்கள். ஒத்துழைப்பு கொடுத்து புதிய விஸ்தரிப்புகளும் செய்யும் அளவிற்கு உங்களுக்கு மனதை திருப்தி படுத்துவார்கள். சிறு வியாபாரிகள் கூட நல்ல லாபத்தைப் பெற்று வாடிக்கையாளர்களின் கவனத்தை ஈர்ப்பார்கள்.

**உத்தியோகத்தர்களுக்கு-**
கிடைக்க வேண்டிய பதவி உயர்வு கண்டிப்பாக கிடைக்கும். வேலையில் உங்களுக்கு இருந்த சத்ருகள் விலகி விடுவார்கள். நண்பர்கள் போல மாறி உங்களுக்கு ஆச்சரியத்தை கொடுப்பார்கள். சகபணியாளர்களின் ஆதரவும், உதவியும் உங்களுக்கு கிடைப்பதால் நீங்கள் வேலையை சுலபமாகச் செய்து முடிப்பீர்கள்.

**பெண்களுக்கு -**
வேண்டிய வசதிகள் குடும்பத்தில் கிடைக்கும். அனைத்து வசதிகளும் கேட்காமலேயே கிடைப்பதால் மனதில் மகிழ்ச்சி குடி கொண்டிருக்கும். மாமியார் - மருமகள் அமைதியான சூழ்நிலை உண்டாகும்.

**மாணவர்களுக்கு -**
கல்வியில் அதிக ஆர்வம் உண்டாகும். குறித்த நேரத்தில் அனைத்து பாடங்களையும் கற்று ஆசிரியர் பாராட்டைப் பெறுவீர்கள். அதிகாலை எழுந்து பாடங்களை படிப்பதே சிறந்தது என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

**அரசியல்வாதிகளுக்கு -**
கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளை கவனமாக பின்பற்றுவீர்கள். கட்சியில் தேவையான நிதி உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். மக்களிடையே அதிக செல்வாக்கு உண்டாகும்.

**கலைத்துறையினருக்கு -**
அதிக வருமானம் கிடைப்பது மனதிற்கு நிம்மதியை அளிக்கும். இசைக் கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள் ஆகியோருக்கு விருதுகள் பரிந்துரைக்கப்படும்.

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்:**
இந்த குரு பெயர்ச்சியில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் உங்களுக்கு வெற்றியே கிடைக்கும். நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விடயங்கள் நல்லபடியாக ஒவ்வொன்றாக நடந்தேறும் என்பதில் ஐயம் வேண்டாம்.

**சதயம்:**
இந்த குரு பெயர்ச்சியில் அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. தூக்கமின்மை ஏற்படும் மனதில் தேவையில்லாத கற்பனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டாம். சுத்தமான உணவுகளை எடுத்துக் கொள்ளுங்கள்.

**பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்:**
இந்த குரு பெயர்ச்சியில் நல்ல விசயங்கள் அனைத்தும் உங்களுக்கு வெற்றிகரமாக நடக்கும். சிலர் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். அவர்களின் திறமையை நீங்கள் பாராட்டி அவர்களுக்கு சன்மானமும் உங்கள் கையால் வழங்குவீர்கள்.

**பரிகாரம்:**
சனிக்கிழமைதோறும் முன்னோர்களை வழிபட வேலையில் இருக்கும் பிரச்ச்னைகள் அனைத்தும் தீரும்.



## மீனம்:

### (பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

**கிரகநிலை:**
அக்டோபர் - 04 - 2018 அன்று இரவு 10.05 மணிக்கு குரு பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்:**
உங்கள் ராசியாதிபதியான குரு பகவான் இது நாள் வரையில் அஷ்டம குருவாக உங்கள் ராசிக்கு எட்டாம் இடத்தில் அமர்ந்திருந்தார். இனி ஒன்பதாம் இடமான பாக்கிய ஸ்தானத்திற்கு குருபகவான் பெயர்ச்சி ஆகிறார். தொட்டது துலங்கும் கால கட்டம் துவங்கப் போகிறது.

குடும்பத்தைப் பொறுத்தவரை தன்னுடைய புத்தியில் அனைவருக்கும் அறிவுரை செய்து கொண்டிருப்பீர்கள். மிகவும் அழகான தோற்றப் பொலிவுடன் காணப்படுவீர்கள். தீடீரென புதிதாக ஆடை வாங்கி உடுத்திக் கொள்வீர்கள். நல்ல குணநலன்களை பின்பற்றுவீர்கள். குருபகவான் ஏழாம் பார்வையாக உங்கள் தைரிய வீரிய ஸ்தானத்தைபார்ப்பதால்உங்களுக்கு எந்தக் காரியத்திலும் தைரியமாக இறங்கக்கூடிய ஆற்றல் உண்டாகும். காரியத்திலும் கண்ணும் கருத்துமாக இருந்து வருவீர்கள்.

தொழிலைப் பொறுத்தவரை உங்கள் தொழில் ஸ்தானத்தில் ஏற்கனவேதொழில் காரகனாகிய சனிபகவான் அமர்ந்திருப்பதால் அதைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். நல்ல முக்கியஸ்தர்கள் உங்களுக்கு ஆதரவு தருவார்கள்.

**உத்தியோகத்தர்களுக்கு -**
பலரது பாராட்டுகளைப் பெறுவீர்கள். மனக்கவலைகளை மறந்து உற்சாக மிகுதியாக காணப்படுவீர்கள். சிலருக்கு தந்தை பார்த்து வந்த வேலை அவரது ஓய்வுகாலத்திற்கு பிறகு உங்களுக்கு கிடைக்க வாய்ப்புண்டு. அதற்கான முயற்சியை நீங்கள் செய்யுங்கள்.

**பெண்களுக்கு -**
மிக மகிழ்ச்சியாக இருப்பார்கள். ஆடை, நிறைய தங்கம் போன்றவை சேரும். சிலர் புதிய சேமிப்பை துவங்குவீர்கள். குடும்பத்திற்கான எதிர்கால நற்திட்டங்களை திட்டம் போட்டுச் செய்வீர்கள்.

**மாணவர்களுக்கு -**
தைரியமாகவும், தெளிவாகவும் இருப்பார்கள். கல்வியில் இருந்து வரும் ஆர்வம் அதிகரிக்கும். தேர்வுகளை எதிர்கொள்ளும் போது மனதில் திடமும், தைரியமும் உண்டாகும்.

**அரசியல்வாதிகளுக்கு -**
கட்சியில் தந்தையாரால் செல்வாக்கு உண்டாகும். எதிர்பார்த்த கட்சிப்பதவிகள் கிடைக்கும். அவர் வழி சொத்துகளும் உங்களுக்கு பிரச்சினையின்றி வந்து சேரும்.

கலைத்துறையினருக்கு நல்ல பாராட்டுகளும், விருந்துகளும் கிடைக்கப் பெறுவீர்கள். உயரிய விருதுகளுக்கும் உங்கள் பெயர் பரிந்துரைக்கப்படும். தந்தை உங்களுக்கு ஆதரவு நல்குவார்.

**பூரட்டாதி 4 ஆம் பாதம்:**
இந்த குரு பெயர்ச்சியில் அலைச்சல் அதிகமாக இருப்பதுடன் உடல் சோர்வும் ஏற்படலாம். முக்கிய முடிவுகள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாகவே அமையும், கவலை வேண்டாம். மகன் அல்லது மகள் திருமணத்திற்கு ஏற்பாடு செய்வீர்கள்.

**உத்திரட்டாதி:**
இந்த குரு பெயர்ச்சியில் அடிக்கடி உங்களை நீங்களே பெருமையாக பேசிக் கொள்வீர்கள். நீண்ட தூர பயணங்கள் ஏற்படலாம், அது உங்களுக்கு வெற்றிக்காகவே இருக்கும் என்பதை மனதில் வையுங்கள்.

**ரேவதி:**
இந்த குரு பெயர்ச்சியில் பிரச்சினைகள் பெரிதாக வராது. உடல் நலத்தில் அக்கறை காட்ட வேண்டி வரும். சிலருக்கு அலர்ஜி சம்பந்தமான உபாதைகள் வந்து மறையும். வருமானத்திற்கு குறை ஏற்படாது.

**பரிகாரம்:**
பழைய கோவில்களுக்கு தீப மேற்றுவதற்கு எண்ணெய் வாங்கிக் கொடுங்கள்.







இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ். கிளையினர் யாழ். பொலிஸ் நிலையத்தில் இரத்ததான நிகழ்வை நடத்தியபோது யாழ். பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் இரத்ததானம் வழங்கினர் நிகழ்வின் இரு பதிவுகள் ....

(இ-19)





யாழ். – கிளிநொச்சி முஸ்லிம் பேரவையின் 'எதிர்காலத்தில் மீள் குடியேற்ற நடவடிக்கை' சம்பந்தமான கலந்துரையாடல் யாழ். நூலக சிற்றூண்டிச்சாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற போது வடமாகாண சபை உறுப்பினர் ஐயூப் அஸ்மின் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். (இ-19)



படங்கள் – எம்.எல்.லாபிர்

யாழ் நுழைவாயில் லயன்ஸ் கழகத்தின் செயலாளர் ப.திருச்செல்வன், சிறுவர் தினத்தில் யாழ். நாவலர் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினார். (இ-19)














வடமாகாண சபை உறுப்பினர் ஐ.அஸ்மினின் பிரமாண அடிப்படையிலான நிதியொதிக்கீட்டில் ஜே/86, ஜே/87, ஜே/88 பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பாதணி வழங்கும் நிகழ்வு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் கடந்த வாரம் நடைபெற்ற போது யாழ். மாநகர முதல்வர் இ. ஆனோல்ட் மற்றும் கல்லூரி அதிபர்கள், யாழ். – கிளிநொச்சி முஸ்லிம் பேரவை உறுப்பினர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-19)





# தொடரும் சீரற்ற காலநிலையால் 6 பேர் சாவு; 10 ஆயிரம் பேர் பாதிப்பு

சீரற்ற காலநிலையின் காரணமாக 5 பேர் உயிரிழந்துள்ளனர். 10 ஆயித்துக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் காணாமல் போயுள்ளார்.

பதுளை, களுத்துறை, காலி மற்றும் கேகாலை மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அனர்த்தம் தொடர்ந்து அமுலில் இருக்கிறது என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

தற்பொழுது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை இன்று வலுவடைய கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் 2மணிக்கு பின்னர் மழை அல்லது இடியுடன்

## மழை வலுக்கும் நிலை குறித்து அறிவிப்பு



கூடிய மழை பெய்யக்கூடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையில் காரணமாக நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த காலநிலையினால் காலி, களுத்துறை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் 6 ஆயிரத்து 89 குடும்பங்களை சேர்ந்த 23 ஆயிரத்து 243 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தேசிய அனர்த்த நிவாரண சேவை மத்திய நிலையத்தின்பணிப்பாளர்சமிந்த பதிராஜா தெரிவித்துள்ளார்.

முழுமையாக பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையும் வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கையும் 9 ஆகும் என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

ஓரளவுக்கு பாதிக்கப்பட்ட வீடுகளின்எண்ணிக்கை297ஆகும். பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 3 நலன்புரி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 62 பேர் தங்கியுள்ளனர்.

இதேவேளை எத்தகைய திடீர் அனர்த்த நிலையையும் எதிர்கொள்வதற்காக மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலக மட்டங்களில் முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவி வரும் கடும் மழை காரணமாக, நாட்டில் பல பிரதேசங்களில் அனர்த்த நிலை ஏற்பட்டுள்ளது. பொதுமக்களுக்குத் தேவையான பாதுகாப்புடன் மற்றும் நிவாரணங்களை வழங்குவதற்கு மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்கும் அதிகாரிகளுக்கு பணம் வழங்காதீர்கள்




வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்கும் அதிகாரிகளின் பின்னால் சென்று பணம் வழங்கி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளப்படக் கூடாதென்று அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற 233 சாரதி ஆலோசகர்களுக்கு நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று சாரதி பயிற்சி பாடசாலைகள் உரிமையாளர்கள் தமது பயிற்சியாளர்களுக்கு சரியான பயிற்சிகளை வழங்கி, சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அவர்களை தரம் உயர்த்த வேண்டும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வைத்தியசாலைகளில் மருந்து கையிருப்பு; கணினி மயப்படுத்துவதற்கு நடவடிக்கை

கொழும்பு,ஒக்.09

வைத்தியசாலைகளில் மருந்து கையிருப்புத் தொடர்பான தகவல்கள் கணினி மயப்படுத்தும் வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சுகாதார போக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிக்கையில்–

சகல மக்களுக்கும் சமமான அளவில் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே தற்போதைய அரசின் நோக்கமாகும்.

பொது மக்களுக்கு தட்டுப்பாடின்றி மருந்தை விநியோகிப்பது இதன் நோக்கமாகும். மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டவுடன் உடனடியாக வைத்திய சேவைப் பிரிவுக்கு அறிவிப்பதுடன் ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் இதன் மூலம் வசதி கிட்டுகின்றது.

மாகாண சபைகளில் உள்ள வைத்தியசாலைகளிலும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட இருப்பதாகவும் சுகாதார அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார்.

## கொழும்பில் குப்பை கழிவு அகற்றல் நிறுத்தப்பட்டமைக்கு காணி மறுசீரமைப்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனம் விளக்கம்




கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய 207 மில்லியன் ரூபா கொடுப்பனவில் ஒரு பகுதியேனும் கொழும்பு மாநகர சபை வழங்கினால் குப்பை மற்றும் கழிவு அகற்றல் நடவடிக்கைகளை காணி மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் முன்னெடுக்கும்.

காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு மீளச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை மேற்கோள் காட்டி நேற்று முதல் குப்பைகள் அகற்றும் நடவடிக்கையிலிருந்து காணி மறுசீரமைப்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனம் விலகிக் கொண்டது. இதுதொடர்பாக கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரொஷான் குணவர்த்தன உரையாற்றினார்.

கடந்த சனிக்கிழமை முதல் குப்பை மற்றும் கழிவு அகற்றல் நடவடிக்கை நிறுத்தப்பட்டமைக்கு காணி மறுசீரமைப்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனமே காரணம் என்று கொழும்பு மேயர் ரோஷி சேனாநாயக்க குற்றம் சாட்டினார்.

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வெலிபன நுழைவாயில் மீண்டும் திறப்பு!



கொழும்பு, ஒக்.09

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வெலிபன என்ற நுழைவாயிலில் பிரவேச பகுதி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையில் காரணமாக இந்த நுழைவாயில் பகுதி கடந்த 6 ஆம் திகதி முதல் தற்காலிகமாக மூடப்பட்டது.

இந்த நுழைவாயில் பகுதி நேற்றுக் காலை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## உலக குடியிருப்பு வாரத்திற்கு அமைவாக 100 புதிய மாதிரிக் கிராமங்கள்!

உலக குடியிருப்பு வாரத்திற்கு அமைவாக 100 புதிய மாதிரிக் கிராமங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் லக்விஜய சாகர பலன்சூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் வீடுகளை நிர்மாணிப்பதற்காக மூன்று வருட காலப்பகுதியில் 300 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

அனைவருக்கும் நிழல் என்ற வீடமைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் பொதுமக்களின் வீட்டுத்தேவையும், பொருளாதார மற்றும் சமூக நிலையை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மோ. சைக்கிள்களை ஏற்றிச்சென்ற வாகனம் பனிக்கள் குளத்தில் தடம்புரண்டு விபத்து!



முல்லைத்தீவு,ஒக்.09

மோட்டார் சைக்கிள்களை ஏற்றிச்சென்ற வாகனமொன்று தடம்புரண்டு விபத்திற்குள்ளாகியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் பகுதியில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளை ஏற்றிச்சென்ற வாகனமே விபத்திற்குள்ளாகியுள்ளது.

இதன்போது சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோர் காயங்கள் எதுவுமின்றி தெய்வாதீனமாக தப்பியுள்ளனர். இருப்பினும் இந்த வாகனம் மற்றும் அதில் ஏற்றிவரப்பட்ட மோட்டார்சைக்கிள்கள் சேதமடைந்த நிலையில் பெரும் சொத்துசேதம் ஏற்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் .

# ஏமன் துறைமுகத்தில் சரக்கு, எண்ணெய் கப்பல்களை சிறைபிடித்திருக்கின்றனர் ஹவுத்தி போராளிகள்!

சனா,ஒக்.09

ஏமன் நாட்டில் உள்ள ஹொடைடா துறைமுகத்தில் பத்துக்கும் அதிகமான சரக்கு மற்றும் எண்ணெய் கப்பல்களை ஹவுத்தி போராளிகள்சிறைபிடித்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

ஏமன் நாட்டில் அரசுக்கு எதிராக ஹவுத்தி இன மக்கள் ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈரான் அரசின் ஆதரவுடன் ஜனாதிபதி அப்ட் – ரப்பு மன்சூர் ஹாதிதலைமையிலானசர்வதேச அங்கீகாரம் பெற்ற அரசை கடந்த 2015 ஆம் ஆண்டு நிலைகுலையச் செய்த ஹவுத்தி போராளிகள் தலைநகர் சனா நகரத்தை தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

மக்களால்தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக மற்றொரு போட்டி அரசை நடத்திவரும் இவர்கள்மீது உள்நாட்டுப்படைகளும் அண்டை நாடான சவூதி அரேபியா தலைமையிலான நேசநாட்டுப்படைகள் தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றன.

அந்த நாட்டின் இரண்டாவது பெரியதுறைமுகம்அமைந்துள்ள ஹொடைடா மாகாணத்தில் ஹவுத்தி போராளிகளின் ஆதிக்கம்செலுத்திவருகின்றனர். இவர்களுக்கு ஈரான் அரசு மறைமுகமாக ஆயுத உதவிகளை அளித்து வருவதாக குற்றம்சாட்டப்படுகிறது.




ஹொடைடா மாகாணத்துக்குட்பட்ட அனைத்துபகுதிகளையும் மீட்கும் நோக்கத்தில் சவூதி அரேபியா தலைமையிலான அமீரகப் படைகள் சமீபத்தில் அங்கு முற்றுகையிட்டு உச்சகட்ட தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதல்களில் 10 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். 30 லட்சம் பேர் தங்கள் வசிப்பிடங்களை விட்டுவெளியேறியுள்ளனர்.

ஏமன் அரசுக்கும் ஹவுத்தி போராளிகளுக்கும் இடையே சமரசம் ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபை முயன்றது. இருதரப்பினருக்கும் இடையிலான அமைதி பேச்சுக்கான இந்த முயற்சி கடந்த மாதம் தோல்வியை தழுவியது.

இந்நிலையில், கோதுமை மாவு, சர்க்கரை என சுமார் 5700 தொன் அளவிலான நிவாரணப் பொருள்களை ஏற்றிவந்த சரக்கு கப்பல்கள் மற்றும் பெற்றோல், டீசல் ஆகியவற்றை ஏற்றிவந்த டேங்கர் கப்பல்களை ஹவுத்தி போராளிகள் சிறைபிடித்து வைத்துள்ளனர் என உள்ளூர் ஊடகங்கள்செய்திவெளியிட்டுள்ளன.

## பயங்கரவாதத்துக்கு நிதி அளிப்பதை தடுக்கும் பிரேரணை ஈரான் நாடாளுமன்றில் நிறைவேற்றம்!



தெஹ்ரான், ஒக்.09

ஈரான் நாடாளுமன்றத்தில் பயங்கரவாதத்துக்கு நிதி அளிப்பதை தடுக்கும் பிரேரணை நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

சர்வதேச அளவில் பண மோசடிமற்றும்பயங்கரவாதிகளுக்கு நிதியுதவி செய்வதை கண்காணித்துவரும் சர்வதேச நிதி நடவடிக்கை செயற்குழு ஐக்கிய நாடுகளின் பயங்கரவாதிகளுக்கு நிதியளிப்பதை தடுக்கும் கூட்டமைப்பில் ஈரானும் இணைய வலியுறுத்தியது.

இதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 143 வாக்குகள் பயங்கரவாதத்துக்கு நிதி அளிப்பதை தடுப்பதற்காக அளிக்கப்பட்டன. இதையடுத்து, ஈரானுக்கு 3 மாதங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது.

இந்த விவகாரம் குறித்து வாக்கெடுப்பின்போது பேசிய ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் முகமது ஜவாத் ஷரிப்–

ஐ.நா. பயங்கரவாதிகளுக்கு நிதி அளிப்பதை தடுக்கும் கூட்டமைப்பில் ஈரான் இணைந்துவிட்டால் மட்டும் எல்லாம் சரியாகிவிடாது, இருப்பினும், தற்போது தாங்கள் இணையாவிட்டால் எங்கள் மீது பழி சொல்ல அமெரிக்காவுக்கு அதிக சாக்கு கிடைத்து விடும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், ஈரான் நாடாளுமன்றத்தில்பயங்கரவாதிகளுக்கு நிதி அளிப்பதை தடுக்கும் சட்ட பிரேரணை நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டது.

## இந்தோனேசியா நிலநடுக்கம், சுனாமி: 5,000 பேர் மாயம்: தேடுதல் தொடர்கிறது

ஜகர்த்தா ஒக்.09

இந்தோனேசியாவை துவம்சம் செய்த நிலநடுக்கம் மற்றும் சுனாமிக்கு பலியானோர் எண்ணிக்கை 1763 ஆக உயர்ந்துள்ள நிலையில், காணாமல் போன 5 ஆயிரம் பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

இந்தோனேசியாவில் கடந்த மாதம் 29 ஆம் திகதி சிலாவேசி தீவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதைத்தொடர்ந்து அங்குள்ள பலு நகரை சுனாமி தாக்கியது. இதனால் அந்நகரம் அழிவு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அங்கிருந்த வீடுகள், கட்டடங்கள், ஹோட்டல்கள், வணிக வளாகங்கள் அனைத்தும் இடிந்து தரைமட்டமாகின.

சுனாமி தாக்குதலில் பாதித்த பலு நகரில் நடைபெறும் மீட்பு பணிகளில் பேரிடர் மீட்பு படையினருடன் ராணுவமும், பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். இடிபாடுகள் அகற்றப்பட்டு வருகின்றன.



இந்நிலையில், நேற்று முன்தினம் நிலவரப்படி 1763 பிரேதங்கள் மீட்கப்பட்டுள்ளன. சுனாமியால் அதிகம் பாதிக்கப்பட்ட பலரோவா மற்றும் பெட்டோபோ நகரங்களில் சுமார் 5 ஆயிரம் மக்களை காணவில்லை என அந்நாட்டின் பேரிடர் மீட்புத்துறை செய்தி தொடர்பாளர் சுட்டோப்போ புர்வோ நுக்ரோஹோ அறிவித்துள்ளார்.

மலையடிவாரங்களிலும், சகதிக்குள்ளும் சிக்கி கிடக்கும் பல சடலங்களை மீட்பதில் மிகுந்த சிரமங்கள் உள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பாலியல் சர்ச்சையில் சிக்கிய பிரெட் கவனாக் அமெ. உச்ச நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்பு




அமெரிக்காவில்மூன்றுபெண்களால் பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட பிரெட் கவனாக் அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தின 114 ஆவது நீதிபதியாக நேற்று முன்தினம் பதவி ஏற்றார்.

அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி பதவிக்கு பிரபல வழக்கறிஞர் பிரெட் கவனாக் என்பவரை அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பரிந்துரை செய்தார். ஆனால், பிரெட் கவனாக் மீது 3 பெண்கள் பாலியல் குற்றச்சாட்டு கூறினர்.

இதையடுத்து பாலியல் புகாருக்கு ஆளான பிரெட் கவனாக்கை நீதிபதி பதவிக்கு தேர்வு செய்யக் கூடாது என அந்நாட்டில் பலத்த எதிர்ப்பு எழுந்தது. எனினும், அவரை நீதிபதியாக நியமிக்க ஆளும்குடியரசுகட்சிதீவிர முயற்சி மேற்கொண்டது.

இதற்கிடையே, அமெரிக்க செனட் சபையில் நிரந்தர உறுப்பினர்கள் மத்தியில் இதற்கான முதல் வாக்கெடுப்புநடந்தது. இதில் பிரெட் கவனாக்குக்கு ஆதரவாக 51 வாக்குகளும், எதிராக 47 வாக்குகளும் கிடைத்தன. இதனால் அவர் மயிரிழையில் வெற்றி பெற்றார்.

இந்நிலையில், கடந்த சனிக்கிழமை கூடிய அமெரிக்காவின் செனட் சபையில் பிரெட் கவனாக்குக்கு ஆதரவாக 50 வாக்குகள் கிடைத்தன. இதை தொடர்ந்து, அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் 114 ஆவது நீதிபதியாக பிரெட் கவனாக் நேற்றுமுன்தினம் பதவியேற்றார்.

அவருக்கு ஓய்வுபெற்ற நீதிபதி அந்தோனி கென்னடி பதவிப் பிரமாணமும், அமெரிக்க உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஜோன் ரொபர்ட்ஸ் காப்புறுதி பிரமாணமும் செய்து வைத்தனர்.

வொஷிங்டன் நகரில் உள்ள உச்ச நீதிமன்ற கருத்தரங்க மண்டபத்தில் பிரெட் கவனாக் பதவி ஏற்றுகொண்ட போது அவருக்கு எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றத்தின் அருகே நூற்றுக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இதைப்பற்றி ஊடகங்கள் பெரிய அளவில் செய்தியாக்க முயற்சிக்கின்றன என குற்றம்சாட்டியுள்ளார்.

அணு ஆயுத ஒழிப்பு:

## அமெரிக்க - வடகொரியா தலைவர்கள் இரண்டாம் சுற்றுப்பேச்சுக்கு ஏற்பாடு

பியாங்யோங் ஒக்.09

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்ப்பியோ மற்றும் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் இடையே நேற்று முன்தினம் சந்திப்பு நடைபெற்றமையை அடுத்து, ட்ரம்ப் உடனான 2 ஆவது கட்ட பேச்சு விரைவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான், வடகொரியா, சீனா உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில் அமெரிக்கவெளியுறத்துறைஅமைச்சர் மைக் பாம்ப்பியோ சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

வடகொரியா – அமெரிக்கா இடையில் சமீபத்தில் சிங்கப்பூரில் செய்யப்பட்ட அணு ஆயுத ஒழிப்பு ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றுவது தொடர்பாக வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்னை வலியுறுத்துவது அவரது பயணத்தின் அதிமுக்கிய நோக்கமாக உள்ளது.



இதையடுத்து நேற்று முன்தினம் காலை வடகொரிய தலைநகர் பியாங்யோங்கில் ஜனாதிபதி கிம் ஜாங் உன் மற்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்ப்பியோ இடையேயான சந்திப்பு நடைபெற்றது. சுமார் 2 மணி நேரம் வரை இந்த சந்திப்பு நடைபெற்றது.

சந்திப்பு தொடர்பான முழுமையான தகவல்கள் வெளியிடப்படவில்லை எனினும், இந்தச் சந்திப்பு இனிமையான ஒன்றாக அமைந்ததாக மைக் பாம்ப்பியோ தனது டுவிட்டர்பக்கத்தில்குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சிங்கப்பூரில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உடனான சந்திப்பின்போது போடப்பட்ட அணு ஆயுதஒழிப்புஒப்பந்தத்தைமுழுமையாக நிறைவேற்றுவதற்கான வழிமுறைகள் செய்யப்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இருநாடுகளுக்கும் இடையேயான நம்பிக்கையை வலுப்படுத்த வேண்டும் என்பதே தனது லட்சியம் என குறிப்பிட்டுள்ள மைக் பாம்ப்பியோ, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஆகியோரது அடுத்த சந்திப்பு விரைவில் ஏற்பாடு செய்யப்படும் எனவும் கூறியுள்ளார்.

## ஆப்கனில் அரசு அலுவலகம் மீது திடீர் தாக்குதல்: 10 பொலிஸார் பலி!

ஆப்கானிஸ்தானில் உள்ள அரசு அலுவலகத்திற்கு தலிபான் பயங்கரவாதிகள் தீ வைத்ததில் 10 பொலிஸார் உடல் கருகி உயிரிழந்துள்ளனர். இஸ்லாமிய நாடுகளில் ஒன்றான ஆப்கானிஸ்தானில் அரசு படைக்கும், தலிபான் பயங்கரவாத அமைப்புகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக போர் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், வர்டாக் மாகாணத்தில் உள்ள சயீத் அபாத் மாவட்டத்தில் அமைந்துள்ள அரசு அலுவலகத்திற்கு தலிபான் பயங்கரவாதிகள் தீ வைத்ததால் கட்டடம் முழுவதும் தீ பற்றி எரிந்தது. இதில், மாவட்ட தலைமை பொலிஸ் அதிகாரி உட்பட 10 பொலிஸார் உடல் கருகி பலியாகினர்.

மேலும், தலைநகர் காபூலில் இருந்து தெற்கு மாகாணங்களுக்கு செல்லும் முக்கிய வீதிகளையும் பயங்கரவாதிகள் துண்டித்துள் ளனர் என தகவல் வெளியாகியுள்ளது. இந்த வீதிகளை பயங்கரவாதிகள் வசமிருந்து மீட்கும் நடவடிக்கைகளில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

# தே.மு.தி.க. ஆட்சியைப் பிடிக்கும்; விஜயகாந்த் மகன் அதிரடி பேச்சு!

தே.மு.தி.க.கட்சியையாராலும் அசைக்க முடியாது எனவும் விரைவில் நாங்கள் ஆட்சியை பிடிப்போம் எனவும் விஜயகாந்த் மகனான விஜய் பிரபாகரன் கூறியுள்ளார்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் அரசியலில் குதித்து வெற்றியை ருசித்தார். அ.தி.மு.க. வுடன் கூட்டணி அமைத்து சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்தையும் அவர் எட்டிப் பிடித்தார்.

விஜயகாந்தின் அரசியல் பயணத்தில் அவரது மனைவி பிரேமலதா கட்சி தொடங்கிய நாளில் இருந்தே உடன் இருக் கிறார். விஜயகாந்த் பங்கேற்கும் கூட்டங்களில் தவறாமல் அவரும் கலந்து கொள்வார்.

விஜயகாந்த் பங்கேற்க முடி யாத நிகழ்ச்சிகளில் பிரேமலதா தனியாகவும் கலந்து கொண்டு உள்ளார்.



விஜயகாந்தின் மகன்களான விஜய்பிரபாகரன், சண்முகபாண் டியன் ஆகியோர் அரசியல் வாடை இன்றியே இதுநாள் வரையில் இருந்து வந்தனர். இதனால் அவர்கள் அரசியல் பக்கம் தலை வைத்து படுக்கமாட்டார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதனைபொய்யாக்கும்வகை யில் விஜயகாந்தின் மகன் விஜய் பிரபாகரன் திடீரென அரசியல் பிரவேசம் மேற்கொண்டுள்ளார்.

விஜயகாந்த் பிறந்தநாள் மற் றும் தே.மு.தி.க.வின் 14 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு பல்லாவரம் அருகே உள்ள அன காபுத்தூரில் நேற்று முன்தினம் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் விஜய் பிரபாகரன் கலந்து கொண்டு உறையாற்றி யவை வருமாறு –

சிறு வயதில் இருந்தே அப்பா வுடன் காஞ்சீபுரத்துக்கு அடிக்கடி சென்றுள்ளேன். எனக்கு பிடித்த மான ஊர் காஞ்சீபுரம்தான். ஏன் என்றால் சங்கர் படத்தை போல காஞ்சீபுரம் பிரமாண்டமாக காட்சி அளிக்கும்.

இங்கு ஏராளமான மாணவ, மாணவிகள் வந்துள்ளீர்கள். எப் போதுமே ஒரு துறையில் மட்டும் கவனம் செலுத்தக்கூடாது. பல் வேறு துறைகளில் நமது கவனம் இருக்க வேண்டும். அப்போது தான் எல்லா விடயங்களையும் தெரிந்து கொண்டு ஜெயிக்க முடி யும்.

எனக்கு பிரபாகரன் என்று பெயர் வைத்ததற்காக மிகவும் பெருமைப்படுகிறேன். அதுபுனித மான பெயர். எப்போதுமே மன துக்கு பிடித்த விடயங்களை விரும்பிச் செய்வேன்.

இப்போது நான் எந்த நாட் டுக்கு சென்றாலும் எனக்காக 100 பேர் அங்கு நிற்பார்கள். பேட் மிண்டன்போட்டிக்கானஅணியை வாங்கி இருந்தேன். அதில் தான் பி.சி.சிந்து சாதித்து காட்டினார். எப்போதுமே ஒரே மாதிரி சிந் தனை இல்லாமல் மாற்றி மாற்றி யோசிக்க வேண்டும். அப்போது தான் வெற்றி பெற முடியும். பிடித்த விஷயத்தை செய்தால் அதில் எளிதாக வெற்றி பெற முடியும்.

இப்போது தெரிந்தோ தெரியா மலோ எனக்கு பிடித்த இடத்தில் (அரசியல் மேடை) நின்று கொண்டு இருக்கிறேன். இதிலும் எனக்கு வெற்றி கிடைக்கும். எனக்கு வைத்துள்ள பிரபாகரன் என்ற பெயரை காப்பாற்றும் வகையில் செயல்படுவேன்.

எனக்கு எப்போதுமே திமிர் அதிகம். அந்த திமிரோடு சொல் லிக் கொள்கிறேன். சத்தியமாக தே.மு.தி.க. ஆட்சியை பிடிக்கும். நீங்கள் எல்லோரும் அதற்கு உறு துணையாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ள ரோகிங்கியா அகதிகள் எண்ணிக்கை 18 ஆயிரம்!


ஐ.நா. அறிவிப்பு

டில்லி, ஒக்.09

இந்தியாவில் தற்போது 18 ஆயிரம் ரோகிங் கியா அகதிகள் வசித்து வருகின்றனர் என ஐக் கிய நாடுகள் அகதிகள் ஆணையம் தெரி வித்துள்ளது.

பெரும்பான்மை புத்த மதத்தினரைக் கொண்ட மியான்மரில், 5 சதவிகித முஸ்லிம்கள் வாழ் கின்றனர். அந்நாட்டில் உள்ள ராக்கைன் மாநிலத்தில், பௌத்தர்களுக்கும் ரோகிங்ய இஸ் லாமிய மக்களுக்கும் இடையே, இனமோதல் ஏற்பட்டு பெரும் கலவரமாக மாறியது.

பௌத்தர்களால் ரோகிங்யா இனத்தவர்கள் குறிவைத்துத் தாக்குதல் மற்றும் படுகொலை செய்யப்பட்டமையை அடுத்து, அண்டை நாடு களான பங்களாதேஷ், இந்தியா மற்றும் மலேசியா நாடுகளுக்கு பெரும்பாலான ரோகிங்யா மக்கள் அகதிகளாகப் படையெடுத்தனர்.

அவ்வாறு அடைக்கலம் தேடி இந்தியாவுக்கு சென்ற ரோகிங்கிய அகதிகள், நாட்டின் பல்வேறு பகுதிகளில் முகாம்களில் தங்கவைக்கப்பட் டுள்ளனர். மேலும் சிலர் ஆங்காங்கே வசித்து வருகின்றனர்.

இந்நிலையில், 18 ஆயிரம் ரோகிங்கிய அகதி கள் இந்தியாவில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் அகதி கள் முகமை தெரிவித்துள்ளது. இவர்கள் அனை வரும் ஐக்கியநாடுகள் அகதிகள் ஆணையத்தில் பதிவு செய்துள்ளனர்.

மேலும், கைது நடவடிக்கைகள் மற்றும் நாடுகடத்தல்களில் இருந்து தங்களை தற்காத்து கொள்வதற்காக இவர்களுக்கு அடையாள அட்டைகள் மற்றும் ஆவணங்களும் வழங்கப் பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் இந்தியாவுக்குள் சட்ட விரோத மாக வசித்து வந்த ரோகிங்யா அகதிகள் 7 பேர் மியன்மாருக்கு நாடுகடத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ராகுல் காந்தியின் பேரணியில் பலூன்கள் வெடித்து தீ விபத்து!

மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பேரணியில் ஆரத்தி எடுக்க முயன்றபோது அருகில் இருந்த பலூன்கள் வெடித் தமையால் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள் ளது.

இந்தியாவில் அடுத்த ஆண்டு நாடாளுமன்றபொதுத்தேர்தல்நடக்க உள்ள நிலையில், சத்தீஷ்கார், மிசோரம், மத்தியபிரதேசம், ராஜஸ் தான், தெலுங்கானா ஆகிய 5 மாநில சட்டசபை தேர்தல் திகதி அறி விக்கப்பட்டுள்ளது. தேர்தலையொட்டி காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி மத்திய பிரதேசத்தில் சுற்றுப் பய ணம் மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில், ஜபால்பூர் மாவட்டத்தில் 8 கி.மீ. தொலைவு காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி திறந்தவெளி வாகனத்தில் நின்றபடி பிரசாரத்தில் ஈடுபட்டுகொண்டிருந் தார். அவரை வரவேற்கும் விதமாக வீதி நெடுகிலும் கட்சி கொடிகளுட னும், வண்ண வண்ண பலூன்களு டனும் தொண்டர்கள் காத்து இருந் தனர்.



அப்போது சில தொண்டர்கள் ராகுல்காந்திக்கு ஆரத்தி எடுப்பதற் காகவாகனத்தைநோக்கிசென்றனர். ஆரத்தி எடுக்கும் போது நெருப்பு அருகில் உள்ள பலூன் மீது படவே தீ பற்றிக்கொண்டது. தீ பலூன் மீது படவே பட பட வென வெடித்து சிதறி யது. ஆனால் விபத்து ஏற்பட்ட இடத்தில் இருந்து ராகுல்காந்தி சற்று தள்ளி இருந்தார். இதனால் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

ராகுல்காந்தி திறந்தவெளி வாக னத்தில் பிரசாரம் மேற்கொண்ட போது தீவிபத்து ஏற்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியது.

## இந்தியாவில் சுயதொழில் தொடங்குவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது!


பிரதமர் மோடி தெரிவிப்பு

டேராடூன், ஒக்.09

இந்தியாவில்தொழில்தொடங் குவதற்கும், நடத்துவதற்கும் நடைமுறைகள் எளிதாக்கப்பட் டுள்ளமையால் சுயதொழில் தொடங்குவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என பிரத மர் மோடி தெரிவித்துள்ளார்.

உத்தராகாண்ட் மாநில தலை நகர் டேராடூனில் 2 நாள் நடைபெறும் முதலீட்டாளர் மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இதில் உள்நாடு மற்றும் வெளிநாடு களைச் சேர்ந்த ஏராளமான முத லீட்டாளர்கள்கலந்துகொண்டனர்.

முதலீட்டாளர் மாநாட்டை தொடங்கி வைத்து பிரதமர் மோடி உரையாற்றியவை வரு மாறு–

இந்தியாவில் தொழில் நடத்துவதற்கான நடைமுறைகள் எளிமை ஆக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் தொழில் தொடங் குவதற்கும், நடத்துவதற்கும் நடைமுறைகள் எளிதாக்கப் பட்டுள்ளமையால், சுயதொழில் தொடங்குவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

நாட்டில் வரி கட்டமைப்பை நாங்கள் மேம்படுத்தி உள்ளோம். திவால் சட்டத்தின் மூலம் நாட் டில் தொழில் செய்வது எளிமை யாகி உள்ளது. வங்கி அமைப்பு கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. ஆற்றல், கொள்கை, செயல் திறன் ஆகியவையே வளர்ச்சி யின் தாரக மந்திரம் என்றும் பிரதமர் மோடி தெரிவித்துள் ளார்.

## தமிழ் மரபணுவை மாற்ற நினைப்பவர்களுடன் கூட்டணி இல்லை என்கின்றார் கமல்ஹாசன்!

அரசியலில் நான் 8 மாத குழந்தை, இருந்தாலும் சிறு பிள்ளை எனநினைத்துவிடவேண் டாம் என மக்கள் நீதி மய்யம் தலை வர் கமல்ஹாசன் தெரிவித்துள் ளார்.

சென்னை ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள தனியார் கல்லூரி ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மக்கள் நீதிமய்யம்தலைவர் கமல்ஹாசன் கலந்துகொண்டு உரையாற்றி னார்.

அப்போது அவர் மேலும் குறிப் பிடடவை வருமாறு–

என் கொடியும், நானும் பர பரப்பதும், பறப்பதும் மக்களுக்காக தான். நான் ஆற்றாமையினால் அரசியலுக்கு வரவில்லை. எதை யும்ஆற்றமுடியும்என்றநம்பிக்கை எனக்கு உண்டு. அதை ஏன் செய் யாமல் இருக்கிறேன் என்ற குற்ற உணர்வினால் நான் அரசியலுக்கு வந்தேன்.

எனினும் 30 வருடங்களுக்கு முன்னாள் அரசியலுக்கு வந்தி ருக்க வேண்டும் என்ற ஆதங்கம் எனக்கு உண்டு. அவ்வாறு வந்தி ருந்தால் எனக்கு அரசியலில் 25 வயது ஆகியிருக்கும்.

இப்போது அரசியலில் நான் 8 மாத குழந்தையாக நின்று கொண்டிருக்கிறேன். ஆனால் சிறுபிள்ளை என நினைத்து விடாதீர்கள். பறக்கிறேன் மக்களுக் காக பறக்கிறேன். வேட்டையாடி விளையாடுவது அல்ல என் வேலை.

நான் கோழிக்குஞ்சுகளுடன் வளர்ந்த கழுகு: நான் கழுகு என் பதை மக்கள் தான் சொல்லிக் கொடுத்தார்கள். தமிழகத்திற்கு என்றுதனித்துவம் உள்ளது. தமிழ் மரபணுவை மாற்ற நினைப் பவர்களுடன் கூட்டணி இல்லை என்றும் அவர் கூறினார்.

## எல்லை தாண்டிய தமிழக மீனவர்கள் மீது ஈரான் கடற்படையினர் சூடு: 3 பேர் காயம்!

சவூதி அரேபியா கடற்பகுதியில் எல்லைத்தாண்டி மீன்பிடித்தனர் எனத் தமிழக மீனவர்கள் மீது ஈரான் கடற்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் மூன்று பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் சவூதி அரேபியாவின் கடல்பகுதியில் மீன்பிடித்து விட்டு திரும்பிய போது ஈரான் கடற் படையினர் மீன வர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி யுள்ளது.

இந்த துப்பாக்கிச்சூட்டில் மீனவர்கள் ஆரோக்கிய ராஜ், விவேக், இளஞ்செழியன் ஆகியோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

## அமெ. உயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதன்மைப் பிரதி உதவிச் செயலர், அலிஸ் வெல்ஸ் அம்மையார், இன்று மாலைதீவு மற்றும் இலங்கைக்கான பயணத்தை ஆரம்பிக்கவுள்ளார்.

இன்று தொடக்கம், 11ஆம் திகதி வரை அலிஸ் வெல்ஸ் அம்மையார் மாலைதீவு, இலங்கை ஆகிய நாடுகளுக்குப் பயணத்தை மேற்கொள்வார் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பயணத்தின்போது, இலங்கை மற்றும் மாலைதீவுடனான, தமது கூட்டு தொடர்பான அமெரிக்காவின் வலுவான அர்ப்பணிப்பை அவர் வலியுறுத்துவார் என்றும், திறந்த, செழிப்பான இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில் தமது நலன்களைப் பகிர்ந்து கொள்வார் என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் தங்கியிருக்கும் போது, அலிஸ் வெல்ஸ் அம்மையார், இலங்கை அதிகாரிகளைச் சந்தித்து, இந்தோ – பசுபிக் இலக்குகளை அடைவதற்கு, இந்த வாக்குறுதியின் ஒரு பகுதியாக வளர்ந்து வரும், இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புடன், அமெரிக்க – சிறிலங்கா உறவுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவார்.

அரசமைப்பு மறுசீரமைப்பு, மனித உரிமைகள், நல்லிணக்கம், நிலைமாறு கால நீதி, பொறுப்புக்கூறல் போன்றவற்றில் தொடர்ந்து முன்னேற்றங்கள் எட்டப்பட வேண்டியமையையும் அலிஸ் வெல்ஸ் இலங்கை அரசிடம் வலியுறுத்தவுள்ளார்.

## அரசியல் கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுத் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதன் முடிவிலேயே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

அரசியல் கைதிகளின் விவகாரம் ஒரு சட்ட விவகாரம் அல்ல. அது ஓர் அரசியல் விவகாரம். எனவே அரசியல் கைதிகளின் அரசியலை பயங்கரவாதமாகப் பார்க்கும் ஒரு சட்டக் கட்டமைப்புக்குள் நின்று அதைச் சட்ட விவகாரமாக அணுகக்கூடாது. மாறாக அதனை அரசியல் விவகாரமாகவே அணுகவேண்டும். இது தொடர்பில் அரசு ஓர் அரசியல் தீர்மானத்தை எடுத்து கைதிகளை நிபந்தனை இன்றி விடுதலை செய்யவேண்டும்.

இதனை வலியுறுத்தியும் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் முகமாகவும் யாழ். பல்கலைக்கழக மாணவராகிய நாம் நாளை (இன்று) காலை பல்கலைக்கழக முன்றிலில் இருந்து கிளிநொச்சி – வவுனியா ஊடாக அநுராதபுரம் சிறைச்சாலை வரை நடைபயணம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளோம். அனைத்துத் தமிழ் சமூக ஆர்வலர்களையும் இப் பயணத்தில் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம் – என்றுள்ளது. (ஐ)

## சாலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சி கிழக்கில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நியாயாதிக்க எல்லைப் பரப்புக்குள் அரச நிலத்தில் பிரதேச செயலாளரின் அனுமதியின்றி வாடி அமைத்துத் தொழில் புரிந்த தென்னிலங்கை மீனவர்களுக்கு எதிராக மருதங்கேணிப் பிரதேச செயலாளர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இதனையடுத்து இடம்பெற்ற வழக்கு விசாரணைகளை அடுத்து வடமராட்சி கிழக்குப் பகுதியில் அத்துமீறி வாடி அமைத்துக் கடல் அட்டை பிடித்து வந்த 8 நிறுவனங்களையும் உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் கடந்த 25ஆம் திகதி கட்டளை பிறப்பித்தது.

இதனையடுத்து அங்கிருந்த மீனவர்கள் தமது வாடிகளை அகற்றி வெளியேறியுள்ளனர்.

8 நிறுவனங்களுக்கும் சொந்தமான 32 வாடிகளில் வேலை செய்த 850 இற்கும் மேற்பட்ட தென்னிலங்கை மீனவர்களே இவ்வாறு அங்கிருந்து வெளியேறியிருந்தனர்.

அங்கிருந்து வெளியேறிய மீனவர்கள் முல்லைத்தீவு சாலைப் பகுதியில் கடல் அட்டை பிடிப்பதற்கான வாடிகளை அமைத்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

சாலைப் பகுதியிலுள்ள கடற்படைத் தளத்தை அண்டிய பகுதிகள் உள்ளூர் மக்களோ அல்லது மீனவர்களோ கடந்த காலத்தில் செல்ல அனுமதிக்கப்படாத நிலையில் பிற மாவட்ட மீனவர்கள் மட்டும் அந்த பகுதியில் தொழில் புரிந்து வந்தனர்.

இந்த நிலையிலேயே தற்போது அதிகளவான மீனவர்கள் அந்தப் பகுதியில் வந்து குவிந்துள்ளனர் எனவும், இதன் காரணமாக உள்ளூர் மீனவர்கள் பல பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## நாலக சில்வா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலையான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக்க டி சில்வா மற்றும் ஊழலுக்கு எதிரான செயற்பாட்டாளரான நாமல் குமாரகே ஆகியோருக்கு வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ ஆகியோரைப் படுகொலை செய்யச் சதித்திட்டம் தீட்டிய விவகாரம் தொடர்பான விசாரணையை மேற்கொள்ளவே நீதிமன்றத்தில் நேற்று முன்னிலையாகுமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

அதற்கமைய நேற்று அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எதிர்வரும் 23ஆம் திகதி, நாலக்க டிசில்வா மற்றும் நாமல் குமாரகே ஆகியோரை மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகமூடிகள் அணிந்து வாள்களுடன் நுழைந்த கும்பலொன்று அங்கிருந்தவர்களை அச்சுறுத்திப் பணம், நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

மீசாலை புத்தூர்ச் சந்தி, கமநல சேவைகள் திணைக்களத்துக்கு பின்பக்கமாகவுள்ள வீட்டிலேயே நேற்று முன் தினம் நள்ளிரவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து தெரியவருவதாவது:–

கையில் வாள்களுடன் பத்துக்கும் மேற்பட்டவர்கள் முகமூடிகளை அணிந்துகொண்டு வீட்டின் மதிலைப் பாய்ந்து உள் நுழைந்துள்ளனர். தாம் வைத்திருந்த வாள்களைக் காட்டி வீட்டின் கதவுகளைத் திறக்குமாறு ஜன்னல்கள் ஊடாக வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தினர்.

இதன்போது வீட்டிலிருந்தவர்கள் கூக்குரலிட்டனர். கதவை உடைத்துக் கொண்டு உள் நுழைந்த கொள்ளைக் கும்பல் அங்கிருந்தவர்களை வாள்களைக் காட்டி அச்சுறுத்தி வைத்திருந்தனர். இதனையடுத்து அங்கு பெண் ஒருவர் அணிந்திருந்த தாலிக் கொடி உட்பட 18 பவுண் நகைகளையும் ஒரு தொகைப் பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றனர்.

வீட்டுக்காரர்களின் கூக்குரல் சத்தம் கேட்டு அங்கு வந்த அயலவர்களையும் கொள்ளைக் கும்பல் வாள்களைக் காட்டி அச்சுறுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து கொள்ளையர்கள் கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டும் அவர்கள் ஒரு மணி நேரத்தின் பின்னரே சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ–7)

## விஜயகலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயகலா மகேஸ்வரனின் கைது செய்யப்பட்டமைக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கம் தொடர்பில் பேசியமை தொடர்பில் குற்றத் தடுப்புப் பிரிவுக்கு நேற்று விஜயகலா மகேஸ்வரன் அழைக்கப்பட்டிருந்தார். இதன்போது அவர் கைது செய்யப்பட்டும் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட சிவாஜிலிங்கம் –

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் விஜயகலா பேசிய பேச்சு தொடர்பில் விசாரணைகள் நடந்திருக்கின்றன. அதற்கமைய அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், ஆகக் குறைந்தது இரண்டு வாரமாவது தடுத்து வைக்க முயற்சி நடைபெறுவதாகவும் அண்மையில் கொழும்புக்குப் பயணமொன்றை மேற்கொண்டிருந்தபோது அவரிடம் தெரிவித்திருந்தேன்.

ஆகவே சிரேஷ்ட சட்டத்தரணிகள் ஊடாக பிணை மனுவைக் கோரவேண்டும். இல்லாவிட்டால் முன்பிணை கோருங்கள் என்று நான் கூறியிருந்தேன்.

ஆனாலும் அவருக்கு யார் என்ன ஆலோசனையைக் கூறினார்களோ தெரியவில்லை. அவர் அவ்வாறு செய்யவில்லை. எதுவானாலும் அவர் கைது செய்யப்பட்டமையை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இதுவொரு அரசியல் உள்நோக்கம் கொண்ட நடவடிக்கை. அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழ் தான் அவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். இதுவொரு நீதிக்கு விரோதமான அரசின் எதேச் சதிகார மான போக்கு – என்றார். (ஐ–7)

## பீரிஸின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸின் இல்லத்தில் இடம்பெறவுள்ள இந்த சந்திப்பில் கட்டாயம் பங்கேற்குமாறு எம்.பிக்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கூட்டு அரசிலிருந்து வெளியேறும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவுடன் இடைக்கால அரசு அமைப்பது குறித்து இதன் போது பேசப்படவுள்ளது என்றும், அரசமைப்பு ரீதியில் அதற்கு உள்ள தடங்கல் நிலைகள் சம்பந்தமாக விரிவாக ஆராயப்படும் என்றும் தெரியவருகின்றது.

இடைக்கால அரசு அமைக்கும் யோசனை கூட்டத்தில் முன்வைக்கப்படும் என்று கூட்டுஎதிரணியின் இரத்தினபுரி மாவட்ட எம்.பியான ரஞ்சித டி சொய்சா தெரிவித்தார்.

அதேவேளை, இடைக்கால அரசு அமைப்பதற்கு இலங்கை அரசமைப்பில் ஏற்பாடு இல்லை என்றும், நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னரே அத்தகையதொரு அரசை அமைக்க முடியும் என்றும் சட்டநிபுணர் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அச்சுவேலியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தும் அச்சுவேலியில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் நேற்று மு.ப. 10 மணியளவில் அச்சுவேலி பிரதான பஸ் நிலையம் முன்பாக இடம்பெற்றது.

அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் அரசால் நிறைவேற்றப்படவேண்டும், வருடக்கணக்காக முறையான விசாரணையோ அல்லது விடுதலையோ இல்லாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் உயிர்களைக் காக்கவேண்டும், அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையற்றவகையில் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விலக்கிக்கொள்ள வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

இப்போராட்டத்தில் வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனும் பங்கேற்றார். (ஐ–7)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேனாதிராசா தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஓய்வூதியர் தின நிகழ்வு யாழ். மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகம் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலையே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாகப் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். அங்கு அவர்கள் பல்வேறு துறைகளிலும் முன்னிலைவகித்துவருகின்றனர். அங்கு சிறந்த முறையில் செயற்பட்டுவருகின்றவர்கள் இந்த மண்ணுக்கு வந்து சேவையாற்றுவதற்கும் மிகுந்த ஆர்வத்தைக் கொண்டிருக்கின்றனர். அதேநேரம் போர்க் காலத்திலும் இங்கு பல்வேறு கஷ்டங்கள், துன்பங்களுக்கு மத்தியில் சேவையாற்றியவர்கள் போற்றப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

அவ்வாறு செயற்பட்ட ஓய்வூதியர்கள் பல்வேறு கோரிக்கைகளைத் தற்போது முன்வைத்திருக்கின்றனர். அதிலும் குறிப்பாக ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவை அதிகரிக்கவேண்டுமெனக் கோரியிருக்கின்றனர். இன்று வாழ்க்கைச் செலவு பல மடங்கு அதிகரித்திருப்பதால் ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவும் நிச்சயம் அதிகரிக்கப்படவேண்டும். இவை தொடர்பில் நாம் அரசுக்கும் தெரியப்படுத்துவோம்.

மேலும் போரால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களுக்கு அரசு ஒதுக்கிய நிதி போதுமானதாக இல்லை. அதனால் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் உள்ளது. இவை தொடர்பில் நாம் பல தடவைகள் சுட்டிக் காட்டி வந்திருக்கின்றோம். ஆகவே இதனை அரசு கவனத்திலெடுத்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அதிகளவிலான நிதியை ஒதுக்கவேண்டுமென்று கோரிக்கை விடுக்கின்றோம்.

போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீள்கட்டுமானங்கள் மிக மிக அவசியமானவை. அத்தகைய மீள்கட்டுமானங்களுக்குத் தற்போது நிதி இல்லை. ஆகவே எமது பகுதிகளில் மீள் கட்டுமாணங்களுக்கு அரசு அதிக நிதியை ஒதுக்கவேண்டுமென்று கோரிக்கை விடுக்கும் அதேவேளை, இந்த விடயம் தொடர்பில் நிதி அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்– என்றார். (ஐ–7)

## 'அரசியல் கைதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மெனவும் கோரி யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் நேற்றுப் போராட்டம் நடத்தினர்.

யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

சிறைச்சாலைகளில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் உட்பட சகல அரசியல் கைதிகளையும் அரசு நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் வலியுறுத்தினர்.

இதன்போது, 'தெற்கின் போராட்டம் ஜனநாயகம்; வடக்கின் போராட்டம் பயங்கரவாதமா?', 'கைதிகளின் விடுதலையில் தாமதம் ஏன்?', 'தமிழ்த் தலைமைகள் தூங்குகின்றனவா?' – என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை மாணவர்கள் ஏந்தியிருந்தனர். (ஐ–7)

## ஓய்வூதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.

வடக்கு மாகாண ஓய்வூதியர் தின நிகழ்வு யாழ். மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகம் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலையே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஓய்வூதியம் உரிமையா அல்லது சலுகையா என்பது தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டிருக்கின்றது. இதனை முன்வைத்து ஒரு பட்டிமன்றமே நடத்தலாம் போன்று தென்படுகின்றது. இவ்வாறான நிலையில் சம்பளம் போன்று உரித்து. ஆனால் ஓய்வூதியம் பெறுவது சலுகை என்று ஒருவர் சொல்லிவிட்டார்.

வரிச் சலுகையில் வாகனம் பெறுவது சலுகை, அது உரித்து அல்ல என்ற சர்ச்சையில் இருந்து எழுந்த இன்னொரு சர்ச்சை இது. இது சம்பந்தமாகப் பொது வெளியில் ஒரு விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. அதேபோன்று ஓய்வு பெறும் வயது குறித்து எங்கள் நாட்டில் மீளாய்வு நடைபெற்று வருகின்றது.

நான் இரண்டு வகையான தொழில்களிலே ஈடுபட்டிருக்கின்றேன். அந்த இரண்டு தொழில்களிலும் ஓய்வு பெறுவதற்கு வயதெல்லை கிடையாது. சட்டத்தரணிகளுக்கு ஓய்வு வயது கிடையாது. எனது இரண்டாவது தொழிலான அரசியலிலும் அரசியல்வாதிகளுக்கு ஓய்வு பெறுவதற்கான வயதெல்லை கிடையாது.

ஆனால் அரச ஊழியர்களுக்கு அறுபதை எய்தியவுடன் ஓய்வு பெறவேண்டுமென்பது ஒரு நியதி. அவர்களுடைய அந்த வயதிற்குப் பிறகு மிகவும் திறம்பட பல துறைகளில் செயற்பட்டிருந்தாலும் கூட ஓய்வூதியம் பெற்றுக் கொண்டு வேலை செய்யாமல் இருக்கலாம். ஆனால் இந்த வயதெல்லை மிக விரைவிலே மாற்றியமைக்கப்படுமென நினைக்கிறேன்.

ஓய்வு பெற்றவர்களை எப்படியாக ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்தலாம் என்று நினைத்துச் செயலாற்ற வேண்டிய தருணம் தான் இது. அதே போன்று இன்னும் பல வகையில் ஆக்கபூர்வமான செயலாற்றல்களைக் கொண்டிருக்கின்றவர்களும் அதனைச் செய்யாமல் சமூகத்திற்கு அந்தத் தொண்டைக் கொடுக்க முடியாமல் இருப்பது துரதிஷ்டவசமான ஒரு நிலைப்பாடு.

ஆகையினால் வயதெல்லையை கூட்டுகின்ற அதே நேரத்தில் ஏற்கனவே ஓய்வு பெற்றவர்கள் அவர்களது துறைகளிலே ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுவது நல்லது என்று நாங்கள் நினைக்கின்றோம். அதற்கன செயற்திட்டங்களை பல்வேறு மட்டங்களிலே செய்வது நல்லது – என்றார். (ஐ–7)

# இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலய தேசிய வெற்றியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு





இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தின் தேசிய வெற்றியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் வித்தியாலய அதிபர் அருட்சகோதரி சகாய நாயகி பஸ்தியாம்பிள்ளை தலைமையில் இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை அருட்பணி யேசுரட்ணம் அடிகளாரின் ஆசியுரையுடன் ஆரம்பமானது. நிகழ்வில் பிரதம விருந்தினராக புளொட் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் , சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி எஸ். சிறீகுமரன், கௌரவ விருந்தினர்களாக இளவாலை கன்னியர் மடத்தின் குழுத் தலைவி அருட்சகோதரி குறூஸ், மாரிசன்கூடல் பங்குத்தந்தை அருட்பணி தினேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது விளையாட்டுத் துறையில் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய அணியினர்க்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இதன்படி தேசிய ரீதியில் உடற்பயிற்சியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற அணியினர், தேசிய ரீதியில் கபடிப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற அணியினர், தேசிய ரீதியில் எறிபந்தில் மூன்றாம் இடத்தைப் பெற்ற அணியினர் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். அத்துடன் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் புள்ளிகள் பெற்ற மூன்று மாணவிகள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். இந் நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், அயல் பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர், நிர்வாக உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

## திருமணமான இந்திய வீரர்கள் சார்பில் கோஹ்லி விடுத்த வேண்டுகோள் என்ன?



இந்திய அணி வீரர்கள் வெளிநாடுகளிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போது அவர்களின் மனைவிமார்களையும் அழைத்து செல்வதற்கு அனுமதிக்க வேண்டும் என இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி விடுத்துள்ள வேண்டுகோள் குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என உச்ச நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

விராட் கோஹ்லி இவ்வாறான வேண்டுகோளை விடுத்துள்ளார். ஆனால் நாங்கள் உடனடியாக இது குறித்து முடிவெடுக்கப்போவதில்லை. இது தொடர்பான முடிவை புதிய அதிகாரிகளிடம் விடப்போகின்றோம். தற்போதைக்கு இது தொடர்பான கொள்கை மாறாது என அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்

முன்னதாக வீரர்கள் வெளிநாட்டுப் பயணங்களின் போது தங்கள் மனைவிமார்களை அழைத்துச் செல்வதற்கு அனுமதிக்கவேண்டும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையிடம் கோஹ்லி வேண்டுகோள் விடுத்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய வீரர்களின் வெளிநாட்டுச் சுற்றுப்பயணங்களின்போது வீரர்களுடன் மனைவிமார்கள் இரண்டு வாரம் மாத்திரம் தங்கியிருக்கலாம் என இந்த வருட ஆரம்பத்தில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளி ஆசிரியர்களின் விளையாட்டுப் போட்டி



வடமாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டி நேற்று முன் தினம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

'ஆறுதல்' நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றியீட்டிய ஆசிரியர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். (ஐ)

# தொடரை வென்றது தென்னாபிரிக்க அணி




ஒருநாள் மற்றும் ரி-20 கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்காக சிம்பாப்வே கிரிக்கெட் அணி, தென்னாபிரிக்காவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய தென்னாபிரிக்கா சென்றுள்ள சிம்பாப்வே அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர், மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடுகின்றது.

இந்தச் சுற்றுப்பயணத்தில் முதலாவதாக ஒருநாள் தொடர் நடைபெற்றது. இதில் கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில், தென்னாபிரிக்கா அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் தென்னாபிரிக்கா அணி 120 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்நிலையில், இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் போட்டி நேற்று முன் தினம் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்ச்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய சிம்பாப்வே அணி, 49.3 ஓவர்கள் நிறைவில் 228 ஓட்டங்களுக்குசள் சுருண்டது. இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக, சீன் வில்லியம்ஸ் 69 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

பந்து வீச்சில் ஸ்டெயின், ரபாடா ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், தாஹீர் மற்றும் பெலுக்வாயோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 229 என்ற வெற்றி இலக்கை நோக்கி, பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி, 45.5 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கைக் கடந்தது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரைக், தென்னாபிரிக்கா அணி முழுமையாக கைப்பற்றியது.

இதன்போது தென்னாபிரிக்க அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக ரீஸா ஹென்ரிக்ஸ் 66 ஓட்டங்களையும், ஹெய்ன்ரிச் கிளாசென் 59 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் டொனால்ட் டிரிபனோ 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஹெய்ன்ரிச் கிளாசென் தெரிவு செய்யப்பட்டமையோடு தொடரின் நாய கனாக இம்ரான் தாஹீர் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்குமிடையிலான ஒருநாள் தொடர், நடைபெற்று முடிவடைந்துள்ள நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகளை கொண்ட ரி-20 தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டி இன்று தென்னாபிரிக்காவில் அமைந்துள்ள, கிழக்கு லண்டன்மைதானத்தில்நடைபெறவுள்ளது.

## இலங்கைக்கான ஆயுத விற்பனை விவகாரம்;

# பிரி.வணிகத்துறை அமைச்சரை சந்தித்தனர் தமிழ் இளையோர்



லண்டன், ஒக். 09

இலங்கையுடனான பிரித்தானியாவின் ஆயுத விற்பனையைத் தடை செய்யக் கோருவது தொடர்பில் பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும் என அந்நாட்டு வணிகம் மற்றும் தொழில் அமைச்சரும் வட்போட் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான றிச்சாட் ஹறிங்ரன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களை தொடர்ந்து அடக்குமுறை செய்துகொண்டிருக்கும் இலங்கை அரசுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதை நிறுத்த பிரித்தானிய அரசை வலியுறுத்த வேண்டுமென்ற கோரிக்கையுடன் நாகராசா கதாதரன் தலைமையில், தலைமை ஒருங்கிணைப்பாளர் அஷாந்தன் தியாகராயா, செயற்பாட்டாளர்களான கணேசலிங்கம் குகறூபன், லலிதாரூபி வேலாயுதம்பிள்ளை மற்றும் இக்னேஸ்வரன் யோகராஜா ஆகியோர் வணிகம் மற்றும் தொழில் அமைச்சரை நேற்று முன் தினம் சந்தித்தனர்.

இந்நிலையிலேயே, இந்தக் குழுவினருடனான கலந்துரையாடலில் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அமைச்சர் றிச்சாட் ஹறிங்ரன், ஆயுத விற்பனை தொடர்பில் பிரித்தானியாவின் பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுசெல்ல அவர்களுக்கு மின்னஞ்சல் ஒன்றைத் தான் அனுப்புவார் எனத் தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றம் புரிந்த, விதிமுறைகளை மீறும் நாடுகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதில்லை என்ற ஐ.நா. ஆயுத விற்பனை தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள பிரித்தானியா, பாரிய யுத்த குற்றம் இழைத்துள்ள இலங்கை அரசுக்குத் தொடர்ந்தும் ஆயுதங்களை விநியோகித்து வருகின்றது என்பதை இந்தச் சந்திப்பின்போது குழுவினர் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இனப்படுகொலை புரிந்த அரசுக்கு பிரித்தானிய தொடர்ந்தும் ஆயுதங்களை விநியோகித்து வருவதை தடைசெய்ய வேண்டுமெனக் கோரியமையுடன் பிரித்தானிய அரசு அதனை நடைமுறைப்படுத்த வலியுறுத்துமாறு பிரித்தானியா வாழ் தமிழ் இளையோர் அந்நாட்டு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்தத் தொடர் செயற்பாட்டின் அடுத்த நகர்வாக இத விவகாரம் பிரித்தானிய நாடாளுமன்றில் விவாதத்திற்கு கொண்டுவரும் முன்பிரேரணைக்கான மனுவிற்கு தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இளையோரால் திரட்டப்பட்டு வருகின்றது.

இந்த மனுவில் இதுவரை 26 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வவுனியாவில் நேற்று இராணுவ அணிவகுப்பு





வவுனியா, ஒக். 09

இலங்கை இராணுவத்தின் 69 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அணிவகுப்பு நிகழ்வு ஒன்று வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா, மன்னார் வீதியில் பட்டாணிச்சூர் பகுதியில் நேற்றுக் காலை ஆரம்பமான இராணுவத்தின் அணிவகுப்பு மன்னார் வீதி ஊடாக கண்டி வீதியை அடைந்து நகரின் ஊடாக மூன்றுமுறிப்புச் சந்தியில் இராணுவத் தலைமையக முன்றிலில் நிறைவடைந்தது.

இந்த அணி வகுப்பில் நிகழ்வில் இராணுவத்தின் வன்னிக் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா, இராணுவ அதிகாரிகள், இராணுவத்தினர் கலந்து கொண்டனர். (ஐ-100)

# தமிழருக்கு மஹிந்த கொடுத்ததை பறித்துக்கொண்டது கூட்டமைப்பு

## கடுமையாகச் சாடுகின்றார் பீரிஸ்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னுடைய தனிப்பட்ட நலனையோ அல்லது அவருடைய கட்சி நலனையோ கருத்தில் கொள்ளாது, தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுத்த வாக்குரிமையை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பறித்துக்கொண்டனர் என ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன குற்றம் சுமத்தியுள்ளது.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த, அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஜனநாயகம், மனித உரிமைகள், வாக்குரிமை போன்ற மக்களின் அடிப்படையான உரிமைகள் அனைத்தும் இல்லாது செய்யப்பட்டுள்ளன. இதற்கெதிராகவும், தேர்தலை விரைவாக நடத்தக்கோரியும் விரைவில் நாடுமுழுவதிலும் போராட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் தொடர்பிலும் இடைக்கால அரசை அமைக்க வலியுறுத்தி முன்வைக்கப்பட்டுள்ள யோசனை குறித்தும் நாளை (இன்று) பொதுஜன பெரமுனவில் உள்ள 42 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துரையாட உள்ளார் – என்றார். (ஐ)

# வடக்கு ஓய்வூதியர் தின விழா யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்





யாழ்ப்பாணம், ஒக். 09

வடக்கு மாகாணத் தேசிய ஓய்வூதியர் தின விழா யாழ்ப்பாணத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது.

யாழ். மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இது நடைபெற்றது.

இதன்போது விருந்தினர்கள் அழைக்கப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின கலை நிகழ்வுகள், கவிதை, பேச்சு என்பன இடம்பெற்றன.

வடமாகாணத்தில் ஓய்வூதியர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களும் சிறந்த செயற்பாட்டாளர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், அரச அதிபர்கள், அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-7)

# வீட்டுத்திட்டம் குறித்து ஆராய கிளிநொச்சியில் இந்தியக் குழு



கிளிநொச்சி, ஒக். 09

புதிய வீட்டுத்திட்டங்களை வழங்குவது தொடர்பில் ஆராயும் நோக்கில் இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தியக் குழுவொன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்துள்ளது.

நேற்றுக் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த இந்தக் குழுவினர் மாவட்ட அரச அதிபரைச் சந்தித்துள்ளனர்.

கிளிநாச்சி மாவட்டத்தில் இதுவரை முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள், அவை முன்னெடுக்கப்பட்ட வகைகள் தொடர்பிலும், இதன்போது ஏற்பட்ட சிக்கல்கள் தொடர்பிலும், இந்தியக்குழுவினர் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கேட்டறிந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் –

இந்தியக் குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள், அவற்றின் முறைகள் தொடர்பில் கேட்டறிந்தனர்.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்திற்கு 16 ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள் தேவையாக உள்ளமை தொடர்பிலும் நாம் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருந்தோம்.

வீட்டுத் திட்டங்கள் அமைப்பது தொடர்பில் அராய்வதற்கே தாம் வந்தனர் எனவும், ஆய்வு செய்த பின்னர் மீண்டும் சந்திப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்தியாவின் அனுசரணையோடு கிடைக்கும் வீட்டுத் திட்டத்துடன் கிளிநொச்சி மாவட்ட மக்களின் கணிசமான வீட்டுப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் – என்றார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.